ஞானசம்பந்தம்

மலர் 10.] கர ௵ ஆனி ௴ 10—7—51. [இதழ் 8.

295/3-57

இலவச மருத்துவ நிலையத் திறப்பு விழா.



கனம் பிரதமர் பேசுகிருர்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீன

சென்னை முன்னாள் மேயர்,

திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்களின்

தூரக் கிழக்குப்பிரதேச சுற்றுப்பிரயாண அனுபவங்கள்

இந்தோ சைனாவில் "அங்கோர்வாட்" என்னும் இடத்தில நானகண்ட காட்சியை விளக்கமாக மகா சந்நிதானம் அவர்களிடத்து வந்ததும கூறவேண்டிய கடமை உள்ளது. இரண்டாயிரம ஆண்டுகளுக்கு முன்னர் அப் பிரதேசத்தில் அறபுதமான ஹிந்து கோயில்கள் அழகுடன் அமைக்கப்பெற்றிருககின்றன. அவைகளின் சிதைந்துள்ள சின்னங்கள சென்று பார்க்கும் எந்தத் தமிழனையும வீரத்தமிழனுக ஆககும என்பதில் ஒரு சிறிதும ஐயம இல்லை.

சிற்பவேலைகள் செப்பத்தரமன்று. பிரமிட்கோபுரம எப்படி உலகோர் விந்தையுடன் பார்த்து வியப்புற்று மகிழ்கிறார்களோ அத்தன்மையது என்று துணிந்து கூறலாம். சிதைந்துள்ள அத்திருக கோவில்களை பிரஞ்சு அரசாங்கம ஓரளவு பழுதுபார்த்துப் பாது காத்துவருகிறது. அங்குகண்ட இரணடு சிவலிங்கங்களை மார்ககண்டனைப் போல நான் கட்டிப்பிடித்துப படம பிடித்துள்ளேன். இன்னும் பிற இடங்களும உண்டு; இவை யாவும் அங்குக கொணடுவநது காண்பித்து ஆசிகள் பெறுவதற்கு விருமபுகிறேன.

மேலும் மகாசந்நிதானம் அவர்களுககு இன்றி யமையாததொரு "பொருளும" பெரும பொருள் கொடுத்துப் பெற்றுள்ளேன. அதையும உடன் கொண்டு வருகிறேன்.

எந்த இடத்திற்குச் சென்ற போழ்தினும் மகா சந்நிதானம அவர்கள் தினந்தோறும வழிபாடு செய்யும சொககலிங்கப்பெருமானின் தோற்றம என் கண்கள் முன்வநது நிற்கின்றது. அவன் அருளால அவன தாள் வணஙகி அருள பெறறுள்ள மாண்பினை நான எங்ஙனம் மறத்தல் கூடும்? இஃது யான்பெற்ற பெருமபேறு அன்றோ!

உ
குருபாதம

ஞானசம்பந்தம்

மலர் 10] கரஞு ஆனிமீ 10—7—51. [இதழ் 8

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

மகாசந்நிதானமும் - மந்திரியும்

ஒரே மேடையிலே அரசியல் தலைவரும் – சமயத் தலைவரும் கூடியிருப்பதென்றால் ஆச்சரியப்படத்தக்க விஷயந்தானே! அரசியல் தலைவர் அதிகாரபீடத்து உச்சியிலேயிருப்பவர். சமயத் தலைவர்கள் கடவுளின் திருவடிக்கீழே இருப்பவர்கள். அரசியல் தலைவருடைய பேச்சிலும் நடையிலும் ஒவ்வொரு பகுதியிலும் ஆட்சியின் அருமைபெருமை தொனித்துக்கொண்டேயிருக்கும். சமயத்தலைவரின் பேச்சிலும் நடையிலும் தொண்டு, பணி, அன்பு, அருள் தொனித்துக்கொண்டேயிருக்கும். அரசியல் தலைவர் அன்றைக்குவேண்டும் பசிதணிக்கும் வழிகளைச் சொல்லுவார். சமயத்தலைவர் பசி முதலிய துன்பங்களிலும் மனிதன் மனம் ஒடிந்து மடியாதவண்ணம் எழுச்சியோடு - இளமையோடு இருக்கவேண்டும் என்ற மனப்பண்பாட்டைப் பற்றிப் பேசுவார். நினைப்பு பிழைப்பைக் கெடுக்கும் என்பது ஒரு பழமொழி. இதற்குச் சிறியஉலகம் என்னவோ பொருள்பண்ணி மயங்குகிறது. ஒருவன் நினைப்பு உயர்ந்த தவறுதலே வராது எல்லாம் சரியாக

நடக்கும் என்பதுதான் அதன்கருத்து. ஆதலால் மனிதன் உள்ளுவது எல்லாம் உயர்வாக - இன்பமாக எண்ணவேண்டும். தாலாட்டுந் தாய்க்குரலைக்கேட்டுக் குழந்தையும் பசியை மறந்து லயிக்கிறது. அதுபோலவே துன்பத்தை இன்பமாக எண்ணச் செய்வது சமயத்தலைவர் பேச்சும் செயலும். இப்படி எல்லா வகையிலும் இருவேறு நெறிகளில் செல்லும் தமிழ்நாட்டு இரு பெருந்தலைவர்கள் ஒரு மேடையில் கூடியதில் ஒரு ஒற்றுமை யிருக்கிறது. அதனைப்பார்க்கும் வாய்ப்பு நமக்குக்கிடைத்தது ஒரு அதிர்ஷ்டம்தான்!

3—7—51 செவ்வாய்க்கிழமை நிறைந்த அமாவாசையில் மாயூரம் வடக்குவீதியில் பெண்கள் இலவச மருத்துவ விடுதி தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் கட்டிப் பொதுமக்களுக்கு அளிக்கப்பெற்றது. அதனைத் திறந்துவைக்கவந்த கனம் முதல்மந்திரி P. S. குமார சுவாமி ராஜா அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவுசெய்தார். அதில் இவ்வளவு பெரிய பணியைச்செய்து, அரசாங்கத்திற்குச் செலவு இல்லாமலே வைத்தமையைப் பலபடப் பாராட்டினார். நல்லகாரியங்களை யார்செய்தாலும் பாராட்டி ஊக்கப்படுத்துவது ஒரு அரசியல் தலைவர் செய்யவேண்டிய வேலைதான். அதை மிகமிகப் பாராட்டுகிறோம். அதிலும் 'அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. அதைச்செய்ய முடிய வில்லை. அதற்குப் பணமில்லை' என்று உண்மையை ஒளியாமல் சொல்லிக் கடமையைச்செய்யமுடியாததற்காக வருந்திக் கூறியது எவ்வளவு உயர்ந்த மனப்போக்கு. இப்படி உண்மையை ஒளிக் காமல் ஒத்துக்கொள்ளும் நமது கனம் ராஜாவை எப்படிப் பாராட்டாமல் இருக்கமுடியும். ஆனால் அமைச்சர் அவர்கள் மதஸ்தாபனங்களைப்பற்றிக் கூறும்போது 'ஏராளமான வருவாய் வருகிறது எல்லையில்லாமல் செய்யவேண்டும்', என்று குறிப்பிட்டார்கள். உலகியலில் சர்வவல்லமையுள்ள அரசாங்கம் செய்யமுடியாமலிருக்கும்போது, ஏதோ மண்ணையும், மழை யையும், குடியானவர்களுடைய கூட்டுறவையும் நம்பிவாழும் மடங்களுக்கு இந்தநாளில் எப்படி ஏராளமான வருவாய்

உண்டாக்கமுடியும். அதற்கும் திட்டம் இல்லையா? ஆதீனங்களுடைய வருவாயும செலவும அரசாங்கத்திற்கே தெரிந்திருக்கும்போது முதலமைச்சர் அவர்கள் கூறியது ஆதீனங்கள் மேலுமமேலும் பொதுப்பணிகள் பல செய்ய முன்வரவேண்டும் என்று ஊக்கபபடுத்தும் உறுதிமொழிகளே அல்லாமல் வேறு அல்ல என்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் பேச்சு நயமான பதில் என்று பாராட்டுகிறோம்.

நல்லகாரியங்களைச செய்வதற்காகவே அந்த நாளில் ராஜாக்களாலும், ஜமீன்தார்களாலும் சொத்துக்கள் ஆதீனங்களுக்கு அளிக்கப்பெற்றன என்ற கனம மந்திரி பேச்சையும, எங்கள் ஆதிகுருமூர்த்திகளின் ஞானானுபவத்தாலும, பின்வந்த மகா சந்நிதானம அவர்களின் அருளுழைபபாலும ஆன ஆதீனப் பொருளும, என் உடல் ஆவி எலலாம சமயத்தொண்டிறகும் பொதுத்தொண்டிற்குமே எழுந்தது என்ற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவாகள பேசசையும சேர்த்துச சிநதிககவேண்டுகிறோம. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானம அவாகள் பேசசு மிக ஆழமானது. மடத்துச சரித்திரத்தை மனத்திற்கொண்டு எழுந்த உணமையுரை. தென்னாட்டிலே கோயில்களுக்கு மன்னர்கள் மானியம விட்டிருக்கிறார்களேயன்றி நமது மடத்திற்கு இல்லை என்பதைக் கல்வெட்டுக்கள் நன்றாகக்காட்டும. இதைப்பற்றிய முழுவிவரங்களையும எமது ஆதீனக் கோயில் என்னும புததகத்தில தக்க பட்டய, கலவெட்டுதாரணங்களுடன் காட்டியிருக்கிறோம. அன்றியும் மடத்துச சொத்துக்களும நன்கு விளக்கும. அதிலும ஆதீனச்சொத்துககளை, நாடிவரும ஞானக்கல்வியை நன்கு பரப்பவே பயன்படுத்த வேணடுமாயினும இன்றையமக்கள் மனநிலைககு ஏற்பப்பொதுபபணிககும ஆககியிருக்கிறோம் என்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானமவர்களின் பேசசின் ஆழம சிந்திதது இன்புறக்கூடியது.

ஆதீனம செய்யுங்காரியங்கள் யாவும பிறருக்கு வழிகாட்டியாகவும இருக்கும என்ற உண்மையை ''ஆஸ்பத்திரி சமபந்தமாக வெளியிட்ட புத்தகம ஆஸ்பத்திரிககுவேணடிய சாமான்களையும, அதன அமைப்பையும் காட்டுகிறது, அதற்காகப பத்திரமாக

வைத்திருக்கிறேன்' என்ற அமைச்சர்பேச்சு'எடுத்துக்காட்டியது. உயர்வுகண்ட இடத்தில் பாராட்டும இது எவ்வளவு உயர்ந்த மனப்பான்மை?

அரசாங்கத்தின்கீழ் அனைவரும் அடங்கி நடக்கவேண்டிய வர்களே; ஆதீனமமட்டும அரசாங்கத்தைவிட்டுப் புறம்பாக நடக்கமுடியாது என்ற கனம மந்திரியவர்கள் பேச்சு நமக்குப் பழைய நினைவை மனத்திலே ஓடசெய்தது. ஏழாம நூற்றாண் டிலே பலலவராஜயததிலே அப்பர் என்ற ஒரு சமயவீரர் இருநதார். அரசன் மேற்கொணட மதத்தை அப்பர் வெறுதது வந்தார எனற குற்றததிற்காக மனனன அழைத்தான். அவரோ ஒரு துறவி. துறவிக்கு வேநதன் துருமபு என்பது பழமொழி. அதனுல அவர் யாமார்ககும குடியலலோம, நமனுக்கும பயப்பட மாடடோம நாங்கள யார தெரியுமா? கோமானுக்குக் குடி அடிமைகள ஞாபகமிருக்கடடும எனறாராம. அப்படி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள யாமார்ககும குடியல்லோம என்ற சுதநதரமொழியைச சொன்னது மிக நாசூக்கான-பொருத்த மான பதிலாக இருநதது. அதிலும, சுவாமிகள் நான் ஒரு சந்நியாசி. அதிலும கணக்கன் அதிலும சட்டதிட்டங்களுள்ள வன் என்றபோது ஒரு தனி எழுசசி கேட்டுக்கொண்டிருநத பொதுமக்கள உளளத்தே ஒளிவிட்டு, முகத்திலே பிரதிபலிததுப் பின்னர் உமையாகப பரவுகிறது அந்த உண்மையை நேயர் களுககுத்தெரிவித்துக்கொள்ளுகிறோம. உலகத்திலே இருந்தால் அரசன. இல்லாவிட்டால் ஆண்டி என்பது பழமொழி. அப்படி இருக்க "நான் இருநதாலும சநநியாசி இல்லாவிட்டாலும் சநநியாசி. எங்களுக்குளள சட்டதிட்டங்கள் எங்கள் ஆசாரிய மூர்த்திகளால் சிருஷ்டிக்கப்பட்டன. அவைகளுக்கு அடங்கி நடக்கவேண்டிய கடமை எங்களுக்கு இனறலல என்றும உண்டு. அதிலும ஒரு கணக்கோடு எந்தககாரியங்களையும செய்வோம்" என்ற ஆழமும, வீரமும, உண்மையும செறிய எழுந்த பேச்சை வரவேற்கிறோம.

அதிலும சிறப்பாக ஒரு சமயத்துறவி. அரசியல் தலைவரை அழைபபானேன் எனபதற்குச சொன்ன அழகு மனத்தை

உருக்கவல்லது. அரசியல் தலைவர் எதிலும் அதிகாரத்தைப் பார்ப்பார். மதத்தலைவர் எதிலும் கடவுளைப்பார்ப்பார். அதனால் அமைச்சர் என்பதால் எண்ணவில்லையாம். இவர்கள் பெயர் ஞானக்குமாரனாகிய முருகனை நினைவூட்டுவதால் அழைத்தார்களாம். இதில் எவ்வளவு உயர்ந்ததத்துவம் அமைந்திருக்கிறது பாருங்கள்!

மதஸ்தாபனமசோதா மத்ய அரசாங்கத்திலிருந்து திரும்பி வந்துவிட்டது ஏதோ மடாலயங்களின் முயற்சி என்ற பொருளையும் தொனிக்கச்செய்தது கனம் மந்திரியவர்கள் பேச்சு. நாம் நமது முயற்சியால் – நம்முடைய அறிவால்செய்யும் சிலகாரியங்கள் ஆண்டவனுடைய நியதி என்னும் சட்டத்திற்கு ஒவ்வாததானால் முடிவுபெறுமற்போகிறது. அதற்காக ஆண்டவனை நோவதா? அதுபோல அரசியல் நிர்ணயசபை செய்த விதிகட்கு ராஜ்ய விதிகள் மாறுபட்டதாக இருக்குமானால் அது தானாகவே திரும்பிவரத்தானேசெய்யும். எய்தவனிருக்க அம்பைநோவதா என்று கேட்கிறோம். இதனை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை என்ற வீர மொழியால் உண்மையை விளக்கினார்கள். இதில் அரசன்நினைத்த தவறே அப்பர் சுவாமிகளால் விளக்கப்பெறுகிறது பாருங்கள். இந்த இடத்தில் ஆதீனத்தின் பழைய வரலாறு ஞாபகம் வருகிறது. தஞ்சையரசன் தருமபுரம் கோயிலை இடிக்கச்சொன்னானாம். அடியார்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தினிடம் தெரிவித்துக்கொண்டார்களாம். அப்போது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் "தேசம் சிவாலயங்கள் சேர அலைய ஒரு, மோசம் வந்ததென்று மொழியலாம் ஈசனே! ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால், நோக்குவதென் யாம் பிறரை நொந்து" என்ற ஆசாரியவசனத்தை நினைவுபடுத்திச் சும்மா இருந்தார்களாம். முடிவு இவர்களுக்கு நன்மையாயிற்று. அதுபோல வீணான ஐயங்களுக்கு யாம் விடைதர வேண்டுவதில்லை.

நாட்டிலே பரவிவரும் வேறு பல கொள்கைகளை ஆதீனம் பிரசார மூலமாகத் தடுக்கவேண்டும்; இது அரசாங்கம் செய்ய முடியாதவேலை என்றார்கள். ஆம் உண்மைதான்; அதனை முழு மனதுடன் வரவேற்கிறோம்.

ஒரு மனிதனுக்கு சுரம் உண்டாகிறது. அந்தச்சுரம் பித்தத்தால் உண்டானால் பித்தந்தணிய மருந்து கொடுக்க வேண்டும். வாதசுரமானால் அதற்குத்தக்க மருந்து கொடுக்க வேண்டும. அதுபோல இப்போது உண்டாயிருக்கிற வேற்றுக் கொள்கைச் செயல்கள் அரசியல் எதிர்ப்பால் உத்தியோகவேட்கையால் உண்டாவன. அதனைக் குணப்படுத்தவேண்டுவது யார் கடமை என்று கேட்கிறோம. இருந்தாலும ஆதீனம நல்லமுயற்சியில் பணிசெய்ய அரசாங்க ஆதரவும் வேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சொன்னது மிகவும போற்றற்குரியது

அரசாங்கத்திற்கும் மதப்பணிகளுக்கும் சிறிதும தொடர்பில்லை மதப்பணிகளை மடங்களே செய்யவேணடும என்றார்கள கனம் மந்திரியார். அதற்காகவே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானம அவர்கள் 12ம நூற்றாண்டிலே ஒரு முதன் மநதிரியார் இருந்தார் அவர் தன் சொந்த வருமானத்திலிருந்து திருநாகேஸ்வரம கோயில் கட்டினார். பெரியபுராணம என்ற சைவ தமிழ் வரலாற்றுக்கோயிலை வகுத்தார். 3ம் நூற்றாண்டிலே ஒரு முதன் மந்திரியார் இருந்தார்; கோயில் பணததை அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை; கோயிலிலே மதஸ்தாபனங்களிலே தங்கள் ஆதிக்கத்தைச செலுத்த விருமபவில்லை; அரசாங்கவருவாயைக் கோயில்கட்டுதற்குப் பயன்படுத்தினார். அவர் தியாகம விளங்கியது. அதனால ஆயிரமாண்டாகியும படிப்பவர் கேட்பவர் மனத்தைக் கரைக்கவல்ல திருவாசகத்தேன் பிறந்தது; ஆதலால் அரசியலும் மதமும் எபபடி இணைநதிருகக வேண்டும் என்பதை நினைப்பூட்டினார்கள்.

நமது கனம மந்திரி அவர்கள் மடங்களுக்கும் கோயில்களுக்கும் மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் நல்லகாரியங்களைச செய்வதற்காக இனம் வழங்கினார்கள் என்று ஒருபக்கம சொன்னார்கள். ஒருபக்கத்திலே இவாகளுக்கு நிர்வாகம் இருப்பதால் சமயப்பணிகளைச் சரிவரச் செய்யமுடியவில்லை; ஆதலால் நிர்வாகத்தை இவர்களைவிட்டுபபிரிக்கவேண்டும என்று பேசினார். இந்த இரண்டையும ஆழ்ந்து கவனிக்குமபடி அனபர்களை வேண்டிக்கொள்ளுகிறோம், கனம மநதிரி அவர்கள் சொலலுகிற

காலத்திலே சமயப்பணி இப்போதிருப்பதைவிடக் குறைந்து நடக்கவில்லை; கூடவும் நடக்கவில்லை. "ஓடிவரும் காரணர்க்கு உண்மை வை" என்றமுறையில் தேடிவந்த சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யும் முறையில் இருந்தது. அந்தக்காலத்திலேயே அரசர்கள் ஏராளமானசொத்தைக்கொடுத்து அவர்கள் பராமரிப்பிலேயே விட்டது அறிவீனமா என்ன? தஞ்சையரசன் உள்ளூர்க் கோயிலுக்குச சொத்துவைக்காமலே சொந்தத்தில் வைத்துக் கொண்டிருந்தான். அது என்ன ஆயிற்று என்பதை வரலாற்றுக் கண்கொணடு பார்க்கவிரும்புகின்றோம். அல்லாமலும் மதப்பணி என்பது உலகியலையும அரசியலையும் விட்டு ஒதுங்கியிருக்கும் பணியல்ல. இரண்டறிவும் இருநதாலல்லது மதப்பணி சிறக்காது. அந்த அனுபவமிக நிர்வாகம் பிரியவேகூடாது.

அரசியல் ஒரு காற்றுடி. மதம் நிலைத்தஸ்தாபனம். இதனைக் காற்றுடியிடத்தில் ஒப்பித்தால் மேலும் கீழுமாக மதஸ்தாபனம் சுழலநேருமேயன்றி நிலைத்திருக்கமுடியுமா? 'இப்போதிருக்கிற நாங்கள் தெய்வபக்தியுள்ளவர்கள் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதில் எவ்வளவு உண்மையிருக்கிறது பாருங்கள். தெய்வபக்தியில்லாதவர்கள் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றினல் மதஸ்தாபனங்களின் நிலை என்னவாகும என்பதைப் பொதுமக்களே சிந்தியுங்கள்!

அந்தக்கால அரசர்கள் மதமவேறு அரசியல் வேறு என்று எண்ணவில்லை. ஒன்றுகவே எண்ணினர்கள். ஆனலும் மதஸ்தாபனங்களினமீது ஆதரவும அன்பும காட்டினர்களேயல்லாமல் ஆதிக்கம செலுத்தினர்களா? சரித்திர ஆதாரமிருந்தால் கனம மந்திரி அவாகள் காட்டட்டும். மதத்தொடர்பு இல்லை என்கின்ற இன்றைய அரசாங்கம, நிர்வாகத்தைத் தனியேபிரித்து ஆதிக்கமசெலுத்த விருமபுகிறது இது சமயத்தொடர்பு இல்லாத அரசாங்கத்திற்கு அழகாகுமா என்று கேட்கின்றோம். ஆதலால் பழையவரலாறுகளைத் துணையாகவைத்துப் பார்ப்பதே மேலானது.

மருத்துவநிலையத் திறப்புவிழா நிகழ்ச்சி.

மாயூர நகரத்தின் வரலாற்றிலே முன்னும் பின்னும் கண்டறியமுடியாத ஒரு செய்தி 3—7—51 மாலை நிகழ்ந்தது. இப்படியே பாராட்டிப்பேசியவர்கள் கூட்டத்தில் பலர். கூட்டம் மாயூரம வடக்குவீதியில் புதிதாகக்கட்டி முனிசிபல் நிர்வாகத்திற்கு அளிக்கப்பட்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக இலவச மருத்துவநிலையத்தின் முகப்பில்நடந்தது. உள்ளே நுழைந்ததும ஞாலம்ஓங்க நன்மகப்பெற்றுப் பால்நினைந்தூட்டும் தாயரே! வருக என்ற அழைப்பு விளம்பரம் கண்ணிற்பட்டது. நான் தாயா இல்லையே எப்படி இங்கேபோவது என்ற கவலைதான். இருந்தாலும் அம்மையே அப்பா என்று அழைக்கும் சம்பிரதாயப்படி தாயரே என்றாலும தந்தைமார்களும கலந்திருக்கக்கண்டேன். எனக்கும சிறிது துணிவுபிறந்தது. பந்தல் அலங்காரம் ஒரு தனியழகு. எங்கும மின்விளக்கும் மின்விசிறியும் தங்கள் கடமையைச சமயம்பார்த்து மோசஞ்செய்யாமல் நன்றாக நிறைவேற்றிக்கொண்டிருந்தன. ஜனத்திரள் மிகுதி. புழுக்கமும் வெப்பக்காற்றும தாங்கமுடியவில்லை. வந்திருந்தவர்கள் அனைவருக்கும சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

மாலை 5-30 மணி. குறித்த நேரத்தில் கனம் மந்திரி அவர்கள் வந்துவிட்டார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் அப்படியே. இருவர்களும மேடைமீது அமர்ந்தார்கள். திருககூட்டத்து அடியார்களும நகரப் பிரமுகர்களும பக்கத்தில் இருந்தார்கள். ஆதீன வித்துவான் இசையரசு, சங்கீதசிரோன்மணி M. M. தண்டபாணி தேசிகரவர்கள் 'தொடுக்குங் கடவுட்' பாட்டை எடுத்தார ராக லயத்தில் அனைவரும மனப்படத்தில் மீனாட்சியம்மையை அழகொழுக எழுதிப பார்த்திருந்தார்கள். சினிமாத்தேசிகர படத்தை மாற்றினார மற்றொரு பாட்டை எடுத்தார் குமரனைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டார். இந்த நிலையில் சாமர்த்திய சாலியானபலர மீனாட்சியாகிய தாயையும, முத்துக்குமரசாமியாகிய சேயையும ஒருங்கு தரிசித்தனர். எனக்கு ஒரு எண்ணம் திறப்பது மருத்துவவிடுதி; நாளைய முதல் தாயும சேயுமாக இங்கே விளையாடிக கொண்டிருக்கப் போகிறார்கள். அதன்

திறப்புவிழாவிலேயே தாயையும் சேயையும் விளையாடவிட்டு விட்டாரே தேசிகர் என்று. உடனே ஆதீனத்து வித்துவான் சுவாமிகள் மேடைமீது ஏறினா. பிள்ளைவரமகொடுதத பெரும பாட்டாகிய 'பேயடையா' என்றபாட்டை உருக்கமாகப்பாடினார். வழக்கமபோலக் கொஞ்சம் பேசிவிட்டு கனம் மந்திரியாருக்கு ஆதீனச்சார்பில் அளிக்கப்படும வாழ்த்துரையை வாசித்தார். வாசிப்பதும கம்பீரமாகஇருந்தது கனம மந்திரியாருக்கு ஆதீனச் சார்பில் மாலையும அணிநதார். மந்திரி அவர்கட்கு நகராண்மைக் கழகத்தின் சார்பாக ஒரு வரவேற்பும வாசிக்கப்பெற்றது. வாசித் தவர் முனிசிபல் கௌன்ஸிலர் K. சுந்தரேசையர் அவர்கள். நமது தருமை ஆதீனததின் ஏஜண்டு என்று சொல்லிககொள் வதில் தனியுரிமை உண்டு அவருககு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதான மவர்களுக்கு முனிசிபல் கௌனஸிலர் கந்தசாமிசெட்டியாா அவர்கள் நன்றியுரை ஒன்று வாசித்தளித்தார். அவா ஆதீனத் தின் பரம்பரை சிஷ்யர். இப்படி வாசித்த இடம, வாசித்துக கொடுத்த இடம், வாங்கின இடம் எல்லாம ஆதீனமயம. ஸர்வமும ஆதீனமயம் திறப்புவிழா.

பிறகு ஆங்கிலத்தில் முனிஸிபல் கமிஷனர் அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். ஆங்கிலமாயிருந்தாலும அவர்கள் பேச்சுத்தோரணையே ஜனங்களுக்குள் ஒரு அமைதியை உண்டாக்கிவிட்டது. அதுமட்டுமா? பின்னால் பேசிய எல்லாரும் 'கமிஷனர்சொன்னபடி' 'கமிஷனாசொன்னபடி' எனறுசொல்லிக் கொள்ளுமபடியாகவைத்துவிட்டது. பலததகரங்கோஷங்களுக்கு இடையே கனம் முதல்மந்திரி அவர்கள் பேசத்தொடங்கினார்கள். அவர்கள் பேச்சிலே பாராட்டு, ராஜகம்பீரம, நிர்வாகவேலைகள் எல்லாம் கலந்து காணப்பட்டன.

நகரகாங்கிரஸ்கமிட்டியின்சாாபில ஜனாப் A.M. இஸ்மாயீல் அவர்கள் வெகு விருவிருப்பாகப் பேசத்தொடங்கினார். அவர் பேச்சில் மாயூரம ஹைஸ்கூல்கட்டிடம்கட்ட 50000 ரூபாய் சேர்த்த அநுபவத்தால் உண்டான அருமையை, 2½-லக்ஷம ரூபாய் செலவழித்து மருத்துவசாலை கட்டிததந்த மகாசநநி தானத்திற்கு நன்றியுரையாக ஆர்வத்தை ஐந்து மடங்காகப் பெருக்கிக்காட்டினா. ஒரு திறப்பு விழாவிலே ஒரு ஆர்ட்ஸ்

காலேஜுக்கு, கனம் மந்திரி சந்நிதியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளால் மகாஜனங்களின் நன்மைககாக அஸ்திவாரமும் போட்டுவைத்தார்.

தமிழரசுக் கழகம் முதலிய பல கழகங்களின் சார்பாக கனம் மந்திரியாருக்கு வாய்வாழ்த்தும மாலைகளும் வழங்கப்பட்டன. பிறகு வக்கில் பிர்மஸ்ரீ வைத்தியநாத அய்யர் அவர்கள் நன்றியுரைத்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சில பொன்னுரைகள் வழங்கினார்கள். வெளியூர்ப் பிரமுகர்கள் அனுப்பிய வாழ்த்துக்கள் வாசிக்கப்படடன. பின்னர் M. M. D. அவர்கள் மங்கலவாழ்த்துப் பாடினார்கள். பின்னர் மேடையிலே N.C. வசந்தகோகிலம். ஒரே சங்கீதப்பிரவாகம. செவித்தோணி கொண்டு சிந்தனைக்கரையைச் சேர்ந்தவர் பலபேர். இப்படித் திறப்புவிழா, தாயாய் முலையைத் தருவாளுகிய தாழ்சடைச் சொக்கன் திருவருளால் இனிது நிறைவெய்தியது. திறப்புவிழாவின் நிகழ்ச்சிகள் யாவும் படம்பிடிக்கப்பட்டன. பேச்சுக்கள் எல்லாம் ஒலிப்பதிவு செய்யப்பெற்றன.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்

அறத்துப்பால்

உரைப்பகுதி, உரைவிளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி என்ற நான்கு தலைப்பில் உரைவளம் அமைந்துள்ளது. டபிள்கிரவுன்சைஸ்; 584 பக்கங்கள்.

விலை தபாற்கூலியுள்பட ரூ. 7—0—0.

K. பாலநாதன்,
செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம, மாயூரம் P. O.

திறப்பு விழாவில்:

முதல் அமைச்சர்

கனம் ஸ்ரீ P. S. குமாரசுவாமி ராஜா அவர்கள் பேசியது.

தருமபுர ஆதீனமவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

வணக்கம்,

இன்றையதினம் கமிஷனரவர்கள் இந்த அறிக்கையை வாசித்ததிலிருந்து இந்நாள் இந்த ஊருக்கே முக்கிய தினம்; அதற்குக் காரணம் மகாசந்நிதானமவர்கள் பெருந்தொகையைச் செலவழித்து மருத்துவசாலையைக் கட்டிக் கொடுத்ததுதான் முக்கிய காரணம் என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மையென்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள். அவர்கள் ஒரு பெரிய மருத்துவசாலையைக் கட்டிக் கொடுக்காதிருந்தால் நான் வரக்கூடிய சந்தர்ப்பங்கூட ஏற்பட்டிருக்காது. இது முற்றிலும் உண்மையென்பதை அதிலும் முக்கியமாக மாயூரம் வாசிகளாகிய நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள். பொதுவாக இன்று நம்நாட்டில், பல நல்லகாரியங்கள் அரசாங்கம் செய்யவேண்டியிருக்கிறது. ஜனங்களுடைய பலவித சௌகரியங்களையும், வசதிகளையும், அரசாங்கம் செய்யவேண்டியது அவசியம். ஆஸ்பத்திரிகளோ, பள்ளிக்கூடங்களோ, மருத்துவசாலைகளோ இன்னும் மற்ற ஜனசௌகரியங்களாக என்னென்ன அவசியம் செய்ய வேண்டுமோ செய்து விட்டார்களா என்றால், எல்லாவற்றையும் செய்யவேண்டிய கடமையுள்ள அரசாங்கம் செய்யவில்லை. படிப்படியாகத்தான் செய்யமுடியுமே யொழிய ஒரே நாளில் எல்லாவற்றையும் முடித்துவிட முடியாது. இதற்கு முக்கிய காரணம் பணந்தான் என்பதை நீங்களும் அறிவீர்கள். ஆனால், அரசாங்கம் நம்முடைய மாகாணத்தில், ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளையும், உபகாரங்களையும் அரசாங்கம்

செய்யும்வரை ஜனங்கள் காத்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே, அரசாங்கம் சக்திக்கு ஏற்றபடி செய்கிறது போக, மற்ற அவசரமான வேலைகளை, ஆங்காங்கு கிராமத்திலும் நகரங்களிலுமுள்ள வசதி உள்ள பெரியவர்கள்தான செய்யவேண்டும. அதை யொட்டி நீங்கள் பார்த்தால் முககியமாகத் தமிழ் நாட்டி லும மற்ற இடங்களிலும தனவந்தர்கள் அவரவர்கள் சகதிககுத்தக்கபடி பள்ளிகளையோ மருத்துவச்சாலை களையோ ஆஸ்பத்திரிகளையோ கட்டச் சகதிககேற்றபடி ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதை நீங்களும் அறிவீர்கள்; அது மாத்திரமல்ல;

நேற்றுத் தஞ்சாவூரில உள்ள ஜில்லாவின் தலைநகர் பெரிய ஆஸ்பத்திரியிலே இருககிற டாக்டர்கள் ஜில்லா மெடிகல ஆபீஸரிடம சொனனர்கள்; "பழையகால முதல 100 வருஷகாலமாக ஒவ்வொரு வார்டும மிராசு தார்களாலும், ஜமீன்தார்களாலும் கட்டப்பெற்றிருப்ப தாக" கல்கள போடப்பட்டிருககிறது. இந்த ஜில்லா விலே பல வருஷங்களாகவே மடாதிபதிகளும் மிராசு தார்களும ஜமீன்தார்களும வைத்திய வசதிக்காகப் பணம் செலவுசெய்து வருகிறூர்கள். இன்னும் செய்து கொண்டுதான் வருகிறூகள். ஆகையால், இப்பொழு தும அதையொட்டித் தருமபுர ஆதீனம் மாயூரம் வாசிக ளாகிய உங்களுககும் உங்கள் பககத்திலுள்ளவர்களுக் கும் உங்கள் சௌகரியத்தை யுத்தேசித்து இரண்டரை லட்சரூபாய் செலவில் இந்த ஆஸ்பத்திரி கட்டப்பட்டி ருப்பது உங்கள் அதிர்ஷ்டமே. ஆதீனம் சமீபத்திலிருப் பதால, மாயூரம் வாசிகள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் தான என்றே சொலலவேண்டும். ஏனென்றூல், எலலா ஊர்களுககும இநதமாதிரி வசதி அவசியந்தான். ஆனல் அநதநத ஊரிலும இந்தமாதிரி ஆதீனம் பககததிலிலலாததால இநதமாதிரி வசதிகள் எல்லா ருககுட கிடைப்பதிலலை. எனககும ஒரு குறையுண்டு. அதிலும, எஙகள ஊரும பெரிய ஊர்தான். உங்கள்

ஊரைக்காட்டிலும் ஜனத்தொகையில் பெரிய ஊர்தான் அதிலும் எங்கள் ஜில்லாவுக்கு ரொம்பகஷ்டம். எங்கள் ஊரில பெரிய ஆஸ்பத்திரி இல்லை; அங்கங்கும் சிறு ஆஸ்பத்திரிகளிருககின்றன என்றாலும பெரிய ஆஸ் பத்திரி இல்லை ஆஸ்பத்திரி சமபந்தமாகப் போடப் பட்டிருக்கும புத்தகத்தில் ஒரு ஆஸ்பத்திரி கட்டவேண்டு மானால் என்னென்ன பொருள்கள் வேண்டுமென்று ஜாப்தா தெரிவிக்கிறது. எனககு ஒரு ஆஸ்பத்திரி கட்டவேண்டுமானால் இத்தனை பொருள்கள் வேண்டும் என்று எனக்கே தெரியாது; இன்றுதான் தெரியும். எண்ணிப்பார்த்தேன்; 95 or 96 விதமான சாமான் கள் வேண்டியிருக்குமென்று தெரிகிறது. இனி வைத்திய வசதிக்காக ஆஸ்பத்திரியோ, மருததுவ சாலைகளோ கட்டுவதாக இருநதால, ஆஸ்பத்திரி கட்டுவது மாத்திர மல்ல, இன்னின்ன சாமான்கள் வாங்கவேண்டி இருககு மென்று சொல்லுவதற்கு இனிமேல் ஆஸ்பத்திரி கட்டு கின்றவர்களுககுக் கொடுக்க இந்த புத்தகங்களை வாங்கி வைத்துக்கொண்டிருககிறேன். அதில் சில சாமான்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாய் இருக்கின்றன. உதாரண மாக, படுககைகள் பதினாறு, நாற்காலிகள் பத்துப் பதினைந்து என்று சில சாமான்கள் இருக்கின்றன. அவைகளைச் சொலலவிலலை; படுக்கையென்றால் ஒரு சாமான். அந்த விதமாகப் பார்த்தால் 95 அல்லது 96 சாமான்கள் தேவையாயிருக்கின்றன. அத்தனைவித சாமான்கள் ஆஸ்பத்திரிக்கு அதுவும் மருத்துவ ஆஸ் பத்திரிககு வேண்டியிருக்கிறது.

இந்தஊர் முனிசிபாலிடியார் வருமானத்தில் $2\frac{1}{2}$ லட்சரூபாய் செலவழிப்பதென்றால் இந்தமாதிரி ஆஸ் பத்திரி கட்டமுடியாது. ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டிக் கொடுத்ததோடு ஆதீனத்தார் முப்பதினாயிர ரூபாய் செலவு செய்து சாமான்கள் வாங்கிககொடுத்திருககிறார் களே அவ்விதம வாங்குவதற்கோ முனிசிபாலிடிக்குக கஷ்டமாயிருக்கும்; செய்யவும முடியாது. அதற்கு அவர்

களுக்குப் பணவசதி இருக்காது. இத்தகைய பெரிய காரியங்கள் ஆதீனம் உங்களுக்காக இத்தனைரூபாய் செலவழித்துக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகி இதைக்கட்டியதற்காகச் சந்தோஷப்படுகிறேன். அதிலும், நான் அதிகம் சந்தோஷப்படும் விஷயம் என்னவென்றால் இந்த மருத்துவச்சாலை இருக்கும் இடமோ விஸ்தீரணமான இடம். அதுவும் ஊருக்கு மத்தியில், இந்தக்காலத்தில் இம்மாதிரியான வசதியான இடத்தில் அமைந்திருப்பது உங்கள் அதிர்ஷ்டந்தான். இன்னும் சில இடங்களிலும் ஆஸ்பத்திரிகளை மிகவும் நெருக்கடியான இடங்களில் ரோட்டோரத்தில் கட்டியிருக்கிறார்கள். சுற்றிலும் விசாலமான இடம் இல்லை. ஆஸ்பத்திரிக்குக் காற்று வெளிச்சம் வசதி இருக்க வேண்டும். தூசி மண் எட்டாத இடத்தில் அமைய வேண்டியது முக்கியமான விஷயம். அந்தமாதிரி பஸ் கார்கள் தூசிமண் எட்டாத தூரத்தில் கட்டிடம் அமைந்திருப்பதும் உங்கள் அதிர்ஷ்டந்தான். அதன்காரணம் முன்னமே காலியான இடம், ஏற்பட்டிருந்ததும் உங்கள் அதிர்ஷ்டந்தான்.

மடம் ஏற்பட்டது உங்களுக்குச் சமீபத்தில். அதனால் உங்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. எனக்குப் பொறாமை கொஞ்சம் உண்டு என்று முன்னமே சொன்னேன். அவர்கள் வாசித்தளித்த பத்திரத்தில் என்ன சொன்னார்கள்? ஆதீனத்தை ஸ்தாபித்தவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஜனித்தவர்கள் என்றும், நான் அந்த ஊருக்குப்பக்கத்து ஊர்க்காரனென்றும் என்னைக் கூறினார்கள். ஆனால் அந்த ஊருக்கும் ஏதாவது பங்கு உண்டா என்று கேட்கிறேன். பங்கிருந்தால் விசேஷமாக இருக்குமென்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். (கரகோஷம்) நான், என்னுடைய ஏழாவது வயதுவரை ராஜபாளையத்தில் இருந்தாலும், பிற்பாடு ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்த பள்ளிக்கூடத்தில்தான் படித்து

வந்தேன். அப்போதும் எங்கள் ஊர் பெரிய ஊர்தான். இருந்தாலும் பள்ளிக்கூடவசதி கிடையாது. இப்போது 30 வருஷங்களாகத்தான் இராஜபாளையத்தில் பள்ளிக்கூடம் உண்டாகியிருக்கின்றது. அதற்குமுன் இராஜபாளைய வாசிகள் படிக்கவேண்டுமானால், ஸ்ரீவில்லிபுத்தூருக்குப்போய்தான் படிக்கவேண்டும். என்னுடைய விளையாட்டுக் காலங்களில், ராஜபாளையத்திலிருந்தாலுங்கூட எங்களூரிலிருந்து ஏழுமைலில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில்தான் அதிகமாக இருந்திருக்கிறேன்..

அநேகமாக என்னை ஸ்ரீவில்லிபுத்தூர்வாசி என்றே சொல்லிவிடலாம். இராஜபாளையத்தில் இருந்தாலும், தாலூகா தலைமையென்ற நிலைமையில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அடிக்கடி எல்லாவற்றிற்கும் போகவேண்டிய வேலை இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் படித்தவன்; ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்தவன்; ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவாசி என்றமுறையில் எனக்கு ஸ்ரீவில்லிபுத்தூருடன் மிகவும் உரிமையுண்டு. என்னை ஸ்ரீவில்லிபுத்தூர் வாசியென்று சொன்னாலும் சம்மதந்தான். அந்த ஊரில் ஆதிகர்த்தா ஜனித்தவீடு ஒன்று இருக்கிறது. அதுவும் எனக்குத் தெரியும். நான் பள்ளிக்கூடத்தில் படித்தகாலங்களில், அதுவழியாகப் போகும் பொழுது, அதைப்பார்த்து, இது தருமபுரம் ஆதீனம் ஜனித்த இடம் என்று சொல்லிக்கொள்வது உண்டு. அந்த ஊர்க்காரர்களும் அவ்விதம் சொல்லிக்கொள்கிறதுண்டு. எனக்குத் தெரிந்தமட்டும் ஸ்ரீவில்லிபுத்தூர் வாசிகளும் சும்மா இருக்கவில்லை. ஆதீனத்தில் தயாளமானகுணத்திலே, பலநல்லகாரியங்களைக் கேள்விப்பட்டு இருக்கிறார்கள். பத்திரிகைகள் மூலம் படித்துப் பார்த்து இருக்கிறார்கள். மாயவரத்திற்கும் கும்பகோணத்திற்கும் செய்கிற இவர்கள் மூலகர்த்தா பிறந்த ஊர் ஆகிய எங்களுக்கும் ஏதாவது கிடையாதா? என்று இவர்களை அணுகிக் கேட்டிருப்பதாகவும், ஏதோ செய்து விட்டதாகவும்கூடக் கேள்வி. உங்களுக்குப் பக்கத்தில் இந்த

ஆதீனம் என்றென்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. அதில் எனககுச் சந்தோஷந்தான். இவ்வளவு காலத்துககுப் பிறகு எங்களுக்கும் இவர்கள் உதவி கொஞ்சம் கிடைககவேண்டும். இவ்வளவுகாலத்திற்குப் பிறகு எங்களுககுக் கொஞ்சம கிடைக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருககிறது. வெளி ஜில்லாவுககுப் போகிறதே என்று நீங்கள் எண்ணவேண்டாம். ஆட்சேபிக்கமாட்டீர் களென்று நினைக்கிறேன். என்றும் உங்கள் ஜில்லா வுக்குக் குறைவு கிடையாது. என்லறக்குமிவர்கள் உங்கள் பக்கததிலிருப்பார்கள். இது மாத்திரமல்ல! ஆதீனங்கள் இருககும வரைக்கும் – அவர்களுக்குத் தயாள குணம் இருககுமவரைககும் உங்களுககுச் செய்துகொண்டுதான் வருவார்கள். அத்தோடு, கொஞ்சகாலமாக ஆதீனங்கள் படிப்பு வளர்ச்சி, மதாபிவிருத்திக்கான எவ்வளவோ காரியங்களைச் செய்துவருகிறார்கள் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆதியில், நல்லகாரியங்களைச் செய்வதற்காகத்தான் இவர்களுக்கு அந்தகாலத்தில் பெரிய அரசர்களாலும் தனவந்தர்களாலும் சொத்துக் கள் கொடுக்கப்பட்டிருககின்றன. இல்லாதிருந்தால் இவ்வளவு சொத்துககள சேர்ந்திருககாது. ஏதோ மத்தியில் அவ்வளவுதூரம் செய்யாதிருந்தாலுங்கூடப் பிறகு இப்போது பல வருஷங்களாக நல்ல காரியங் களைச் செய்யத்தொடங்கிவிட்டார்கள். இதபோற்றத் தக்கது இதனைத்தொடர்ந்தும செய்யவேண்டும். நிற்க,

ஆனல் சில மடங்களுககு அரசாங்கம் புதிதாகச் சட்டம்செய்வதில் தங்களைக கட்டுப்படுத்துமோ என்ற கொள்கை இருந்துவருகிறது. சஞ்சலப்படுவதாகவும் அறிகிறேன். அந்தமாதிரியான சந்தேகம் வேண்டாம். பயப்படவும் வேண்டாம். ஆதீனம் சொத்துக்களையோ நிலங்களையோ எடுத்துககொண்டு அரசாங்கம வேறு முறையில் செலவிடுமோ என்ற எண்ணம வேண்டவே வேண்டாம. ஆதீனங்கள் நல்லமுறையில நடைபெற வேண்டும். அவர்கள் மத விஷயமாக எல்லா நல்ல

காரியங்களையும் இப்போதிருக்கும் முறையில் நல்லவித மாகத் தாராளமாகச் செய்யலாம். ஆட்சேபணை கிடையாது. ஆதீனததுககு வருபவர்கள் மதவிஷய மாகத் தாராளமாகப் பணம செலவு செய்யவேண்டும். ஆதீனங்களுககுச் சொத்துககள் ஏராளம். அவைகளைச் சாமர்த்தியமாக நிர்வாகம் செய்தால்தான் வருமானம் நல்லமுறையிலே அதிகம் கிடைக்கும். அதையொட்டி மற்ற நிர்வாகங்களையும் நடைபெறச்செய்து, மடாதி பதிகள் மதசம்பந்தமான காரியங்களைச் செய்யச் சாவகாசம் இருககவேண்டும் என்ற எண்ணமேயொழிய ஆதீனத்தின் நிலங்களையோ அல்லது சொத்துககளையோ அரசாங்கம் எடுத்துககொள்ளும் என்ற எண்ணம் வேண்டாம். பணத்தை நல்ல முறையிலே சேர்த்துச் சாமர்த்தியமாக நிர்வாகம்செய்வதற்கு வேறொருவரை நியமித்துக கொள்ளவேண்டும். இவ்வளவு பெரிய நிர்வாகத்தை அதிகமாகக் கவனித்துச் செய்ய மடாதி பதிகளுககுச் சாவகாசம காணமல் இருககலாம என் பதே அரசாங்கததின் கருத்து. இதைச்சந்தேகித்துச் சட்டம் செய்து விட்டால் தங்களைக் கட்டுப்படுத்துமோ என்ற எண்ணம் மடாதிபதிகளுககு இருந்தாலும் இல்லா விட்டாலுங்கூடச சிலபேர் அப்படிப்பட்ட எண்ணங்கள் (சந்தேகங்கள்) அவர்களுககு வரும்படியாகத் தூண்டி விடுவோர்களுமிருககிறார்கள். அவர்களுககு நான் கூறு கிறேன், அத்தகைய எண்ணம வேணடாமெனறு. கெடுதலுககல்ல மசோதா இப்பொழுதிருககிற நாங்கள் தெய்வபகதியுள்ளவர்கள். மதகாரியங்களில நமபிககை உள்ளவர்கள். தரும காரியங்களில் ஈடுபடுகிறவர்கள். கோவில்களோ மடங்களோ இல்லாமல் செய்துவிட வேண்டுமென்று ஒருவருமிலலை. இவ்வளவும எதற்காகக் கூறுகிறேனென்றால், இந்த அரசாங்கத்தில் இயற்றி மத்திய அரசாங்கத்தில இருந்து ஒப்புககொள்ளாத நிலையில திரும்பிவந்திருககும இந்த மசோதாவைப் பற்றிய அபிப்பிராய பேதங்களைக குறித்தே இவ்வளவும் சொல்லுகிறேன். மடத்துககு அரசாங்க ஒத்துழைப்பு

அவ்சியம். இன்னென்று மடாதிபதிகள் பலவிதமாகச் சொல்லும் ஜனங்களுடைய ஆதரவிலேமட்டும் இருக்க முடியாது, நலல முறையிலே அரசாங்க நிர்வாகத்துக் குள்ளேயே இருக்கவேண்டுமேயொழிய புறம்பாக இருக்க முடியாது.

அந்தக் காலத்திலே, ஆதீனங்கள் எப்படி ஏற்பட்ட தென்றால், அரசாங்கத்தோடு ஒத்துழைத்து வந்ததால் தான் நல்ல நிலைமையில் வளர்ச்சியடைந்தன. ஒத் துழைக்காமல் வந்திருக்கமுடியாது என்று கூறுகிறேன். ஆகையால் இன்றைக்குள்ள ஆதீனஙகள் அரசாங்கத் தோடொத்துழைத்து மதத்துக்கு எதிராகச் சிலர் பேசி வரும் பிரசாரத்தை எதிர்த்து நல்லமுறையில் வேலை செய்யவேண்டும். உங்கள் பிரயத்தனத்தினலை மத்திய அரசாங்கம் இந்த மசோதாவைத் தள்ளிவிட்டாலுங் கூட ஆதீனங்கள் இந்த அரசாங்க நிர்வாகத்தில் அடங்கியே இருக்கவேணடும் என்பதைத தெரிந்து கொள்ளவேண்டும. புறம்பாக இருககமுடியாது. உங்கள் கௌரவம் எங்கள் கௌரவததை யொட்டியே போக முடியும். அரசாங்கத்தின் கௌரவம் உயரப் பாடுபட வேண்டும். ராஜாங்கங்களின் ஆதரவில்தான் மடங்கள் தோன்றின. அரசாங்கத்தின அககரைககிணங்கவே மடங்கள் நல்லமுறையில் நடககமுடியும. அபிப்பிராய பேதமான அரசாங்கம் ஏற்படுமானல் ரொம்பகஷ்டம். எப்போதும் மடத்துக்கும அரசாங்கத்திற்கும் எந்த விதமான பின்ன மனப்பான்மையும் கிடையாது - இருக்கவும் கூடாது. அதோடு சமீபகாலமாக நாட்டில் நடமாடிவரும் மதத்துககு எதிரான கொள்கைகளைப் பரவவிடாமல் நிறுத்தப்படவேண்டும். பலம் பொருந்திய உங்கள் விஷயத்தில் அககரையுள்ளவர்களாக இருந் தால்தான் இதை நிறுத்தலாம். அதை ஆதீனந்தான் செய்யவேண்டும். அரசாங்கம் செய்யமுடியாது. அரசாங் கம் செய்வது வேறு. மடங்கள் செய்வது வேறு. மூடப் பழககம் என்று பிரசாரம செய்து ஜனசமூகத்துக்குப்

பங்கம் விளைக்கும் சிலகட்சியார்கொள்கைகள் ஜனங்களிடம் பரவி வருவதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் பிரசாரத்தால் அது ஜனங்களிடம் பரவாமல் நிறுத்தப்படவேண்டும். இதைச் செய்யக்கடமையுள்ளவர்கள் மடாதிபதிகள் தான் என்று கூறிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். கெட்ட குணங்களை அரசாங்கம் அடக்க முடியாது. நீங்கள்தான் செய்யவேண்டும். மடாதிபதிகளுக்கு விக்கினம் ஏற்படாதிருக்கவேண்டுமென்பதே என்னுடைய எண்ணம். ஆகையால், நீங்கள் செய்யும் பிரசாரத்தால் அது அதிகப்படாமல் குறைந்து மக்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவது உங்கள் கடமை. அரசாங்கம் அதற்குத் துணையாக நிற்கும். நீங்களும் நல்லமுறையில் இருக்கவேண்டும். வித்தியாச எண்ணத்தோடு இருக்கவேண்டியதில்லை. இப்படிப்பட்ட வைத்திய சாலைகளை நீங்கள் செய்யவேண்டும். பெருந்தனம் உள்ளவர்களால்தான் அது செய்யமுடியும். அரசாங்கம் செய்யமுடியாது. இவ்வளவு செலவில் கட்டிமுடித்த மருத்துவசாலையின் அமைப்பை எண்ணிச் சந்தோஷப்படுகிறேன். அரசாங்கம் செய்யவேண்டிய காரியத்தில் இவர்களும் பங்கெடுத்துக்கொண்டதனுல், அரசாங்கத்தின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் செய்யவேண்டிய இந்தக் காரியத்துக்குப் பணச்செலவில்லாமல் அந்தப்பணத்தை மீத்துக் கொடுத்ததற்காக அரசாங்கத்தின்சார்பாகவும் என் நன்றியை ஆதீனத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு வந்திருந்தபொழுது எனக்கு வரவேற்பு அளித்த ஆதீனத்தார்க்கும், நகரசபையாருக்கும், மற்றவர்களுக்கும் என் வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் இந்த மருத்துவசாலையை ஆரம்பித்துவைத்து அது நல்லமுறையில் நடக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். (கரகோஷம்) இந்த ஆஸ்பத்திரியில் (இந்தச் சங்கிலி) முதல் பிரசவமாகும் குழந்தைக்கும் தாய்க்கும் தங்கச்சங்கிலியொன்று ஆதீனத்தார் பரிசளிப்பதாக இருக்கிறார்கள். (கரகோஷம்)

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அருளிய பொன்னுரைகள் :

இன்று ஒரு சிறந்த நல்லநாள் ஆகும். உங்களுடைய கும்பலிலே நான் ஒரு சந்யாசி முன்வந்து இருக்கிறேன். ஏன் முன் வந்திருக்கிறேன்? என்னுடைய பணம் எல்லாம் மதத்தொண்டிற்கே உள்ளது. அதற்காக எழுந்தசொத்து. மதத்தை வளர்ப்பதற்காக எழுந்த சொத்து. 'நாமார்க்கும் குடி அல்லோம்' என்ற சுதந்திரச்சொல் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட எங்கள் அப்பர் அடிகள் அறைகூவி இருக்கிறார்கள் அன்பர்களே. அவர் இப்பொழுதுள்ளது போல அநேககஷ்டங்கள் உள்ளகாலங்களிலும் பொதுத் தொண்டு செய்திருக்கிறார்கள். அதில் ஒன்றை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். உணவுப் பிரச்னை எழுந்தகாலம் இந்தக்காலம். அந்தக் காலத்திலும் இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஊர்தோறும் மக்கள் அறநெறியில் வாழவேண்டும் என்று பெரிய மனப்பான்மையோடு தொண்டாற்றிவந்த ஞானசம்பந்தப்பெருமான், அப்பரடிகள் இவர்கள் இரண்டுபேரும் இறைவனிடத்திலே வேண்டிப் படிக்காசு பெற்றார்கள். படிக்காசுபெற்று என்னசெய்தார்கள்? அதற்கு அரிசி வாங்கினார்கள். அரிசிவாங்கி என்னசெய்தார்கள்? ஏழை மக்களுக்குக் கஞ்சிவார்த்தார்கள். மதத் தலைவர்கள் மதத்தை வளர்ப்பது சிறந்தது. அதோடு பொதுத் தொண்டை வளர்ப்பது மிகவும் சிறந்தது.

மக்கள் தொண்டு சிறந்த குறிக்கோள் என்றமுறையிலே இந்த மருத்துவசாலையைச் சென்றுபோன மகாசந்நிதானம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். மாயூரம் பொதுமக்களுடைய நல்லெண்ணத்தாலும் நகராண்மைக்கழகத்தாரின் பெருமுயற்சியாலும் என்னுடைய ஆதீனததின் சார்பிலும நடந்ததேதவிர என்னால் நடந்ததேன்று சொலவது மிகவும பொருத்தம் ஆகாத ஒருவிஷயம. சந்நிதானம் அவர்கள் அதைச்

செய்தார்கள், இதைச் செய்தார்கள் என்றுசொன்னார் கள். நான் ஒன்றும் செய்யவே இல்லை. என்னுடைய கடமையைத்தான உணர்ந்து செய்தேனே தவிர, நான் செய்யவே இலலை நான் செய்யவேண்டியது இன்னும் எவ்வளவோ இருககிறது. நான் ஆட்சிககு வந்த காலம் மிககுறுகிய காலம். என்னுடைய மடத்தின் வருவாய் இருககிறதே, சொறபமான வருவாய். எனககும் பட்ஜட் உண்டு. நான் ஒரு கணககன், மடாதிபதிமட்டும அல்ல. நான சட்டதிட்டம உள்ளவன். சட்டத்திற்கு உட்பட்டு நடப்பவன். ஒரு சந்நியாசி. ஏன் என்றால் சட்டதிட்டம் சந்யாசிககும உண்டு. இப்பொழுது இருககிற சட்டத் தின கீழே, இப்பொழுது இருக்கிற நிலையிலே எந்தக காரியத்தையும நாங்களே செய்ய முடியாது. நான் ஏதாவது செய்யவேண்டுமானால போர்டு அனுமதி இல்லா மல செய்யமுடியாது. அரசாங்கத்தின் ஆதரவிலலாமல் ஒன்றும்செய்யமுடியாது. நான் இப்பொழுது இங்கே பேசுவது வெளியிலே உங்களுக்கு எல்லாம கேட்க வேண்டும; அதறகு எனன செய்வது? ஸ்பீககர் வைக்க வேண்டுமே அதற்கு அனுமதி வேண்டும், பிளஷரை எடுததுககொண்டு ஓடப்பா என்று நேற்று இதே நேரத் தில சொன்னேன. கதை அலல. நேற்று இதேநேரத்தில் நடந்தது. என்ன கமிஷனர்? (கமிஷனர் சிரித்தல்) அரசாங்கத்தின உதவி இல்லாவிட்டால ஆதீனங்கள் சரிவர நடககாது. ஏன்எனறால் இப்பொழுது ஞானப் பொககிஷமாகிய சேககிழார் புராணம இருககிறதே அந்த நூலை ஆககித்தந்தவர் ஒரு முதல் அமைச்சர். நீங்கள் நன்றாக அறியவேண்டும; ஏன்? ஒரு சைவப் பொக்கிஷம; ஞானப்பொககிஷம ஆககித் தந்தவர் ஒரு மந்திரி, அனபர்களே. பொனனெழுத்துககளில நீங்கள் நனறாகப் பொறிததுககொள்ளவேணடும. ஒரு சந்யாசி செயயவில்லை, தமிழப்பண்டிதன் செய்யவிலலை.

மற்றொனறு, திருவாசகமாகிய தேன் இருககின் றதே-மககளுடைய நாஸ்திக உள்ளத்தைநல்லநெறியிலே

அறநெறியிலே திருப்புகிற நூல் இருக்கிறதே அதை ஆக்கித் தந்தவர் ஒரு முதல் அமைச்சர், அன்பர்களே. (மந்திரி: நான் இல்லை. - சிரிப்பு) இந்த அமைச்சரை முன்னிலைப்படுத்தி ஞாபகப்படுத்திக்கொண்டால்தான் மாணிக்கவாசகர் ஞாபகம்வரும்; சேக்கிழார் புராணம் ஞாபகம்வரும். அரசியலும் மதமும் வேறல்ல அரசியல் தலைவர்களே மதத்தொண்டு செய்கிறார்கள். தாம் முன் மந்திரியா யிருப்பதின் கடமைகளில் ஒன்றாகவே நினைத்திருந்தார்கள். மடங்களின் வளர்ச்சிக்காகவும் நல்லநிர்வாகத்திற்கு உதவிசெய்யும் முறையிலும் எந்த யில் வந்தாலும் நான் முதலில் வரவேற்கிறேன். என்னுடைய வரவேற்பு முதல்வரவேற்பு. எதுவும் ஒரு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுதான் இருக்கவேண்டும். இங்கு சொல்வது மாத்திரமல்ல. இதை இங்குள்ள பெருமக்களிடத்திலே பலசந்தர்ப்பங்களிலே சொல்லியும் இருக்கிறேன். இது என்னுடைய துணிந்த முடிபு. அரசாங்கத்தின் ஆதரவு இருக்கவேண்டும். ஒத்துழைப்பு இருக்க வேண்டும். ஏன்? அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமல் என்ன நடக்க முடியும்? வேண்டும் என்ற முறையில் என் முதல்வரவேற்பு. எங்களுடைய கடமையை நாங்கள் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டும். ஓரளவு செய்திருக்கிறோம்.

உலகியலை வேண்டாது ஒதுங்கி நாங்கள் இருந்து சபை அளவுக்கு வந்திருக்கிறோம். இல்லை என்று யாராவது மறுப்பீர்களா? ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சந்நிதானம் அவர்கள் உங்கள் மத்தியிலே வந்து பேசுவார்கள் என்பது கனவுகூடக் கண்டிருக்க முடியாத விஷயம். ஆனால் உங்களுடைய ஒரு அன்பு வெள்ளத்திலே நான் ஏதேதோ பேசிவிட்டேன். எங்கள் மந்திரி. அவர் குமரர். தமிழ்த்தெய்வத்தின் பெயர் உள்ள எங்கள் ராஜா; அவர்கள் ஆதி குருமூர்த்தி திருவவதாரம் செய்த ஊர் இருக்கிறதே, அந்த ஊர் அவருடைய ஊருக்கு அண்மையில் உள்ளதென்று சொன்னார்களே

ஞாபகத்திலே கொள்ளுங்கள். அவர்கள் எப்பொழுதும் ஆதீனம் நல்ல நிலையிலே இருக்கவேண்டும் என்ற குறிக்கோளினாலேயே இங்கு சொன்னார்களே தவிர, சட்ட திட்டம்பற்றிச் சொல்லவில்லை. சென்னையில் இருந்து டில்லிக்குப்போன சட்டத்தைப் பற்றியல்ல; டில்லியில் இருந்து சென்னைக்குத் திரும்பி வந்த சட்டத்தைப் பற்றியல்ல; ஆதீனத்தின்மேல்வைத்த அன்பினால் நீங்கள் இப்படியெல்லாம் சந்தேகப்படவேண்டாம், நான்குமரன் இருக்கின்றேன், குமாரராஜா இருக்கின்றேன், உங்களுக்குத் துணையாக நிற்பேன், சந்தேகம் வேண்டாம் என்று சொன்னார்களே தவிர, வேறுஒன்றும் சொல்லவில்லை (கரகோஷம்). செந்தமிழ்ச்சொக்கர் திருவருளில் தோய்ந்து இம்மருத்துவ நிலையத்தைத் திறந்துவைக்க யாரை வைப்பது என்று எண்ணினோம். இவர்கள் நினைப்புவந்தது. இவர்கள் எங்கள் ஆதீனத்தில் எப்பொழுதும் நினைப்பில் உள்ளபெரியார். நம்முடைய மருத்துவ விடுதியைத் திறந்துவைக்க இசைந்துள்ள ராஜா அவர்களுக்கு செந்தமிழ்ச்சொக்கர் அருள் செய்யவேண்டும். உங்களைப்போல எனக்குப் பேசத் தெரியாது; நயம்பட உரைக்கத் தெரியாது. ஆகையால் திருவருளால் எங்கள் சேக்கிழார்போல முதல் அமைச்சர் ஸ்தானத்தில் இருக்கிற குமாரசுவாமிராஜா அவர்களுக்கு என்றென்றும் தெய்வ பக்தியும், நிறைந்த செல்வமும் மக்களிடத்திலே பேரன்பும் பெருகவேண்டும்.

அவருடைய உள்ளம் இருக்கிறதே ஒரு பரந்த உள்ளம் எப்பொழுது பார்த்தாலும் சிரித்தமுகம்; யாரைப்பார்த்தாலும் சிரித்தமுகம். "சிரித்தமுகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என்ற அப்பர் அடிகள் சொன்னார்களே. அந்தநிலையிலே உள்ளவர்கள். தேவாரத்திலேயிருந்து இங்கு சொல்கிறார்களே என்று எண்ணுதீர்கள். எப்பொழுதும் சிரித்துக் கொண்டிருப்பதைச் சொல்லுகிறேன்.

இந்த நம் தாய்நாட்டில், சுதந்திரநாட்டில் பிறக்கும் பிள்ளைகள் தவப்புதல்வர்கள். இதை யார் திறப்பது என்று நினைத்தேன். உடனே இவர் ஞாபகந்தான். எல்லாம் ஞானகுமரர்களாக இருக்க வேண்டும். அந்த முறையிலே என் நினைவு ஓடிற்று. ஒருபெயர், தமிழ்த் தெய்வத்தின் பெயர்-குமரன்-முருகக் கடவுள்.

இவரால் திறந்துவைக்கப்பெறும் இந்த ஆஸ்பத்திரியில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் "ஞான வாளேந்தும் ஐயர்" என்று மாணிக்கவாசகர் கூறினாரே, அந்நிலையில் ஞானக குமரர்களாகப் பிறக்கவேண்டும். மாணிக்கவாசகப்பெருமான் இந்தப் பாட்டில் அணிவகுப்பு எல்லாம் அழகாகச்சொல்லி இருக்கிறார்கள். அந்த முறையிலே குமாரசுவாமிராஜா அவர்களும ஒருபடைக் குத்தலைவர். (அவர்கள்) திறந்துவைப்பது பொருத்தத்திலும் பொருத்தம். ஆதீனத்தின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும இவர்கள் திறந்துவைக்கும்படி விரும்புகிறேன். இவர்கள் உயர்ந்த நோக்கம பெருக வேண்டும் என்று மனதில் எண்ணியே வாழ்த்துகிறேன். அந்த முறையிலே மக்களுக்குச் செய்யக்கூடிய தொண்டை என்றென்றும, எப்பொழுதும் இவர்கள் செய்து இன்னும பல்லாண்டு இந்த நிலையில் இருக்க வேண்டும என்று நீங்களெல்லாம் எண்ணவேண்டுமே தவிர, அப்படிக கூடாது என்ற எண்ணம உங்கள் உள்ளத்திலே தோன்றக்கூடாது. பேசி உங்கள் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. அதோடு இவர்களைத் திறந்துவைக்கும்படி விரும்புகிறோம.

ஜனுப். A. M. இஸ்மாயில் பேசியது.

பெரியவர்களே! கனம் முதல் அமைச்சர் அவர்களே!

சந்நிதானம் அவர்களே!

இன்று கமிஷனர் சொல்லியபடி மாயூரம் வரலாற்றில முககிய தினமாகும். இந்த ஊருககு இல்லாத மருத்துவக குறையை நீககும மருததுவச்சாலையைக கனம முதலமைச்சரவர்கள் திறந்துவைத்தார்கள். குறை நீக்கப்பட்டது. அமைச்சரவர்கள் முன்னே வருமபோது விசாரணைக் கமிஷனுககாக ராஜாவாக வந்தார்கள். இப்பொழுது மந்திரியாக நாம ஆக்கிவைத்துவிட்டோம். காரணம ராஜாவுககெல்லாம் நாம் சீட்டுக்கொடுத்து விட்டோம. இப்போது முதன்முதல் முதலமைச்சராக வருகிறார்கள். அவர்களை இங்கே காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் வரவேற்கிறேன. மகாசநநிதானமவர்கள், இரண்டரை லட்சரூபாய் செலவுசெய்து மறக்கமுடியாத படி நிர்மாணித்து இதன்மூலமபெற்ற என்றுமமறையாத புகழைக் கூறிப்பெருமை அடைகிறோம இநநாள் மாயூரம வரலாற்றில் பொன எழுத்துக்களால் பொறிககப்படவேண்டிய நாள். நாங்கள் இந்த ஊரிலே ஓர் உயர்நிலைப்பள்ளி கட்டுவதற்காகப்பட்ட கஷ்டத்தை நாஙகளுமறிவோம; நீங்களும அறிவீர்கள். 50000 ரூபாய் கடனவாங்கிக கட்டப்பட்ட கஷ்டம பெரிது. அப்பேர்ப்பட்ட சமயத்தில சந்நிதானம மனசு வைதது 2½ லட்ச ரூபாய் செலவில் கட்டிககொடுததார்கள். அதுவும ஒரு மருத்துவச் சாலையைக கட்டிககொடுத்திருககிறார்களா. அதிலும் சந்நியாசி ஒருவர் கட்டிக்கொடுத்திருககிறார்கள். இது புகழ்ச்சிககும் பெருமைககும் உரியகாரியம. இவர்களை எப்படிப் புகழ்வது. இதே நேரத்தில் முதல் அமைச்சர் முன் இன்னெனறும சொல்லிககொள்ள ஆசைப்படுகிறேன். நகரசபைச் சார்பிலும, காங்கிரஸ் சார்பிலும் நேற்று நாகப்பட்டிணம தாலுகா அரசியல் மாநாட்டிலே திருவாரூரிலே முதலமைச்சர் பாத்தியதை யோடு கூறிககொண்டார்கள். மடாதிபதிகளும், பெரிய

தனவந்தர்களும் நிறைந்த இந்த ஜில்லாவிலே, அரசாங்க உதவியை எதிர்பார்க்காமல் ஒன்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இல்லையே என்று சொன்னார்கள். அதை இந்த மகாசந்நிதானமவர்கள் நினைப்பார்களானால், ஒருகல்லூரியை நிர்மாணம் செய்வார்கள். மகாசந்நிதானமவர்கட்கும் சிபார்சு செய்யும்படி முதன் மந்திரியைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த ஆதீனம் முதல் சந்நிதானம் பிறந்த ஊருக்குப் பக்கத்தூர்க்காரர் என்று பாத்யதை கொண்டாடிக் கொண்டார்கள். அந்தப்பாத்தியதையோடு அவர்களும் கூறுவார்களானால் செய்துகொடுப்பார்கள் என்று நம்புகிறேன். (கரகோஷம்) இந்த ஆஸ்பத்திரி கட்டுவதற்கு இரும்பு கிடைக்கவில்லை. சிமிண்டு கிடைக்கவில்லை. இன்னும் எத்தனையோ சாமான்கள் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் கட்டி முடித்த மகாசந்நிதானமவர்களுக்கும், திறந்துவைத்த முதலமைச்சரவர்களுக்கும் காங்கிரஸ் கமிட்டி சார்பில், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம் மலர்மாலையையும் சூட்டுகிறேன்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்

தருமபுரம், மாயூரம் P. O.

கு - ரை: எனது கூற்றின் - எனனுடைய சொற்களை. நீ கூறின் - நீ சுமபனிடத்தில சொன்னால இயலவேண்டுமது - கூடுமானதை. பொய்யா - பொய்யாகாமல் இருககுமபடி. துனைவில் - விரைவில். 'கதழும துனைவும விரைவின்பொருள' என்பது தொல்காப்பியம். ஏக-சென்று சொல்லுக. சுதையாம் - அமுதம் போன்றதாகிய. பஞ்சம - ஐநதாவது. காதை - அத்தியாயம். மேலாங்காதை - ஆறுவது அத்தியாயம.

வி - ரை: 'எனது கூற்றின் நீ கூறில்' என்றதனால் தேவி தான் கூறியதைக் குறையாமலும கூட்டாமலும சுமபனுக்குச் சொல்லவேண்டுமென்று தெரிவித்தபடியாம 'இயலவேண்டுமது' என்பது தேவி தன்னைப் போரில்வென்று மணந்துகொளளுதலை யாவது அங்ஙனம் செயயாமல் இருததலையாவது உணாத்தும. அமுதம தன்னைச சாப்பிடடவாககு நரை திரை மூப்புக்களைப் போக்கி மேலான இன்பத்தைத தருவதுபோல இச்சருககமும் தன்னை வாசிபபோருக்குச சங்கடங்களைநீககி வேண்டிய நன்மை களைத் தருவதாதலின் சுதையாம பஞ்சசருககம எனறாா. இச சருக்கத்திலுள்ள மேலான தோத்திரங்கள தேவிசூக்தம என்று தந்திர நூலில் கூறப்பட்டிருககின்றது என்பர். அரசனும வணிகனும இதுவரையிலும் தேவிசரிதமகேட்டுத் தீவினை தீரப் பெறறனராதலினால் வினைவென்றவரே எனச சுமேசமுனிவரால் விளிக்கப்பெற்றனர். காதை - அத்தியாயம; மணிமேகலையிலுள்ள அததியாயம் ஒவ்வொன்றும் காதை என்று வழங்குவதுபோல இவ்வத்தியாயமும காதை எனற பெயரால் கூறபபட்டிருக் கின்றது.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

6. தூமிரக்கண்ணன் வதையுரைத்த அத்தியாயம்

என்ன வம்மை யிசைத்த மொழிசெவித்
துன னு தூதன் றனைவினிற் போயினன்
மன்னு மீதவ வரியெனுஞ் சும்பனோ
டின்ன வோத வெழுந்தது வெஞ்சினம்.

கு - ரை: செவி துன்று - காதிறகேட்கப்பெற்ற, தேவ அரி - தேவர்களுக்குப பகைவன், இன்ன - (தேவிகூறிய) இத் தன்மையான மொழிகளை. 1.

கறுத்த சும்பன் கனல்விழி சிந்துற
மறுக்கொ டூமிர வன்கணன் றன்னையே
பறப்பி னுற்றுப் பருப்பதத் துற்றவ
ளிறக்கு ழற்பற்றி நீயிவ ணோர்கென்றான்.

கு - ரை: கறுத்த - கோபித்த. கனல், - கோபத்தீ, தூமிரவன்கணன் - தூமிரக்கண்ணன; புகைந்துகொண்டிருக்கிற கண்களை யுடையவன், செங்கருப்பான கணகளையுடையவன் எனக் காரணப் பொருள்படும. இவன் சும்பனுடைய சேனைத் தலைவர்களில் ஒருவன். 'வன்கணன்றன்னைநோக்கி' என நோக்கி எனும சொல் இசையெச்சமாக வருவித்துரைக்க. பறப்பின் - விரைவாக. உற்று - சென்று. பருப்பதத் துற்றவள் - இமய மலையிலிருப்பவளுடைய. நோ்க - கொண்டுவருக.

வி - ரை: கறுத்த..................சிந்துற என்றதனுல் சும்பனுடைய கோபத்தின்மிகுதி வெளியாயிற்று. ிறக்குழற்பற்றி நீயிவணோர்க என்றது தேவி புகழிழநதவளாகுதற்பொருட்டு; துக்கமுடையவளாகுதற்பொருட்டு எனினுமாம. 2

அனைய டன்னை யளித்திட முன்னியே
வினையிற் றீர்ந்திடும் விண்ணவர் நேரினும்
தனுவின் கான்முளை யோர்க டடுப்பினும்
புனையி யக்கர்கள் யாழ்வலர் பொங்கினும்.

கு - ரை: அளித்திட - காப்பாற்றும்பொருட்டு, நேரினும்- எதிர்த்தாலும, தனுவின்-தனுஎன்பவளுடைய. கான்முளையோர் கள் - சநததிகளாகிய அசுரர்கள். யாழ்வலர் - கநதருவர். பொங்கினும் - சீறினாலும். 3

வி - ரை: கான்முளை: ஒருபொருட் பன்மொழி.

ஐய மின்றி யவர்தமைக் கோறல்செய்
தெய்து வாயிவ ணென்றிட வேசினந்
துய்ய வோர்நெறி யின்றிய வொண்டிறல்
வெய்ய தானவர் மேவினர் மிக்கரோ.

கு - ரை: கோறல் - கொல்லுதல், என்றிட - என்று சும்பன் கட்டளையிடவும். உய்ய - உயிர்பெற்றுப் பிழைக்க. ஓர் நெறி இன்றிய - (சும்பன் சொல்வழி நிற்றலல்லாமல்) வேறோர் வழியுமில்லாத, நன்னிலையடைதற்கு வேண்டிய நன்னெறி யொன்றுமில்லாத எனினுமாம். மேவினர் - திரண்டனர்.

ஆறெ னும்மயு தத்தொகை பெற்றவர்
வீறொ டேவர வெண்ணிமக குன்றிடை
யேறு போலடைந் தெம்பெரு மாட்டியைச்
சீறி நோக்கிச் சிலமொழி கூருவான்.

கு - ரை: அயுதம் - பத்தாயிரம். வர - தூமிரனாகிய தன்னைச் சூழ்ந்துவர. கூருவான் - சொல்லுவான்.

வி - ரை: எமபெருமாட்டியை என்றதனால் இந்நூலியற்றினார் தேவியைக், குலதெய்வமாகப் பெறறு வணங்குங்குலத்திலுதித்த புண்ணிய முடையாரென அறிக. எம அன்னை யென அடுத்தசெய்யுளிற் கூறுதலும காண்க. 5.

சும்ப னென்னுமத் தோன்றலை நீமணந்
தின்ப மெய்தவென் பின்னிற வாயெனிற்
றுன்பு றககுழற் சுற்றியுய்ப் பேனெனும
வன்பற சீறியெம மன்னை வழங்கினள்.

கு - ரை; இறவாய் எனில் - வாராயானால், சுற்றி - சுழற்றிப்பிடித்து. உய்ப்பேன் - சுமபனிடம கொணடுசேர்ப்பேன. வன்பன் - வலிமையுள்ள தூமிரன். வழங்கினள் - சில சொற்களைக் கூறினள். 6

கேட்டி சூட வளர்ந்திடு சும்பனு
லோட்ட வந்தில னுற்றனே தானையோ
டாட்ட முற்றெனை யீர்தகவ னங்கையி
னீட்ட நினைனத் தடுப்பர் நிலத்திலே.

கு - ரை: ஓட்ட - தூரதநிவிடப்பட்டு, தானை - அசுர சேனை. ஆட்டம உற்று - (என்னுடன்) போர்செய்து வெற்றியைப்பெற்று எனினுமாம. ஈர்த்து - இழுத்து. நீட்ட - நீ கொடுப்பதற்கு (முயன்றால்). தடுப்பர் - தடைசெய்பவர். 7.

என்னு முன்ன மெறுழ்வலித் தூமிர
மன்னு நோககன் மனத்திடை யேசினந்
தன்னை தனைப் பிடிகரு மமையத்தின்
மூன்ன முறற மொழியுமுங் காரமே.

கு - ரை:- எனனும முன்னம - என்று தேவி சொல்லு வதற்கு முன்பே. அன்னை தன்னை - தேவியை, முன்னம - விரைவாக, உறற மொழியும - தேவியின் வாயிலிருந்து வந்த சொல்லும உங்காரமே - உம என்று உரப்பும் சப்தமேயாம். 8.

அம்மையி னுங்கார த்தா லடலேயா யவுணன் மாளச்,
செம்மையி லசுரர் தாமுஞ் சினநதெதிர்த் திடுக ஞேகி,
வெமமைசேர் சரங்கள சூல நவியமே யாதி விட்டுக்,
கொமமைசேர் குயத்தால கோறக கோளரி யெழுந்த தன்றே.

கு - ரை:- அடலே - சாம்பல், அவுணன் - தூமிரக்கண்ணன். அசுரர் - மற்றுமுள்ள அசுர வீரர்கள், நவியம் - கோடாலி; மழுவுமாம். குயத்தாள் - தனமுடையவள்; தேவியானவள்; கோற - அசுரர்களை கொல்லவும, கோளரி - தேவியின் சிங்கமும், எழுந்து - மேலும போர செய்யப் புறப்பட்டது. 9.

வாகுசேர் கரததி ஞேடு வத்திர முகிர்க டம்மாற்,
சேகுறு மவுணர்சேனை சிதைந்தது சிதைந்த கேட்டே,
கோகுகேழ் சுமப னெனபான கொடியராஞ் சண்ட முண்ட, ராகுசா மத்தி ஞோர்பார்த் தம்மையைக கொணர்தி ரென்றான்.

கு - ரை:- (சிங்கத்தினுடைய) வாகு - பலம், வத்திரம் - முகம்; ஈங்கு வாய் எனக் கொள்க. உகிர் - நகங்கள், சேகு - வைரம்; பலம். கோகுகேழ் - கழுதை போன்ற (இழிதன்மை யுடைய), நாமத்தினோர் - பெயருடையவரை. 10.

அக்கொடி யாளைச் சேர்த்தற் கருமையே லசுர ரோடும், மிக்கபல் படையினோடு மேவியே பொருது நீயிர், சொக்குறுங் கூந்தல் பற்றிச் சோர்விலா துய்ப்பீ ரன்றேற், சிக்குறத் தாம்பால் யாத்துச் சேருமி னென் றான் மன்னே.

கு - ரை:- சேர்த்தற்கு - என்னிடம் சேர்த்துதற்கு, அருமையேல் - உங்களிருவராலும் முடியாததாயிருக்குமானால், சொக்கு - அழகு, அன்றேல்-அதுவும் முடியாதானால், சிக்குஉற - அகப்படும்படி. தாம்பால் யாத்து - கயிற்றாற் கட்டி. 11.

இனையது மியலா தாயி னென்சின நீங்கு மாறு, வனிதையை வயப்போத் தோடு மாண்டிடப் புடைத்து மீள்வீர், அனையள்பா லெனக்கு மாத ரகந்தனில் வளர்ந்த நீரால், கனியிருட் குழலி தன்னைக் கட்டிநீர் கொணர்தி ரென்றான்.

கு - ரை:- இனையதும் - இங்ஙனம் கட்டிக் கொண்டு வருவதும், வனிதை - பெண், வயப்போத்து - சிங்கம், புடைத்து - அடித்து, மாதர் - காதலானது; 'மாதர்காதல்' தொல்காப்பியம். நீர் - தன்மை.

வி - ரை:- தனக்கு அவள்பால் காதல் வளர்வதனால் அவளைக் கொல்லாது கொண்டு வருவதே நன்மை யென்கின்றான். 12.

மாயைசே ரசுர வேந்தன் வன்கழல் வணங்கி யன்னோர்
போயின ரம்மை யோடு பொருதழிந் திடுதற் கம்ம
தூயரே யிவனென் றென்னச் சொலும்பரிச் சேதம் பூர்ண
மாயது சத்தங் கூற வன்புடன் கேண்மி னென்றான்.

கு - ரை:- வேந்தன் - சும்பனுடைய, அன்னார் - சண்ட முண்டர்கள். பொருது - போர்செய்து, அம்ம என்னும் வியப்புப் பொருள்தரும் இடைச்சொல் ஈண்டு இரக்கப் பொருள் குறித்தது காண்க. பரிச்சேதம் - அத்தியாயம், பூர்ணம் ஆயது - (உமக்குச் சொல்லி) நிறைவுற்றது. சத்தம - ஏழாவது அத்தியாயம். 13.

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

7. சண்டமுண்டவர்வதை யுரைத்த அத்தியாயம்.

ஆணையா றெழுந்துஞ் சண்ட முண்டர்தா மனிகஞ் சூழ, நீணிலந் தன்னிற் போந்து நிகரிலாச் சைல விந்த்ரன், கோணையாஞ் சுவண மாசசேர் கோட்டினிற் சீய வெந்நில், ஏனுறுந் தேவி யாச முடன்வைகி யிருப்பக் கண்டார்.

கு - ரை ஆணை ஆறு - சும்பனுடையகட்டளைப்படி, அனிகம் - சேனை, சைல இந்திரன் - இமயமலையினுடைய. கோணை - வலிமை, சுவணம் மா சேர் கோட்டினில் - பொன்மயமாகிய பெருமை பொருந்திய சிகரத்தில், "பொற்கோட்டிமயம்' என்பது புறநானூறு. சீயம வெந - சிங்கத்தின்முதுகில், ஏண் - பெருமை, யாசம் - சிரிப்பு. 1

சீற்றம துடைய ராகித் தேவியைப் பற்ற முன்னிக் காற்றினிற் கடிது சென்றார் கரவளை வில்ல ராகி, மாற்றலர்க் கண்ட வன்னே மனத்திடை முனியத் துண்டங், கூற்றுவ னஞ்சக காள வுருவமாய்க் குலவிற் றன்றே.

கு - ரை. 'காற்றினிற் கடிதுசென்றார்', "கால்கிளர்ந்தன்ன வேழம" 'வளிகிளர்ந்தன்ன செலவினர்" திருமுருகாற்றுப்படை. கரம்வளைவிலலர் - கையில் வளைத்த வில்லையுடையவர். மாற்றலர் - அசுரராகிய பகைவரை. முனிய - கோபிக்கவும. துண்டம் - (தேவியின்) முகமானது. காளம உருவம - கருமையானநிறம். 'கருப்புஞ் சிவபபும வெகுளிபபொருள' என்பவாகலின் தேவியின்முகம கோபததால் கருநிறமடைநதது.

எழிற்பிரு குடிவளைந்த விளையள்பா லத்தி னின்றும்,
வழுத்துதற் கரிய காளி கராளமாம் வதனத் தோடும்,
குழுக்கதி ரசிபா சங்கட் டங்கமுங் குலவு முண்ட,
விழுக்கின்மா லையுங்கொண் டங்க மூடுமா மிசமு மின்றி.

கு - ரை: பிருகுடி வளைந்த - (கோபத்தால்) புருவம் வளையப்பெற்ற, இனையள் - இத்தன்மையானதேவியின், பாலம் - நெற்றி, காளி - காளிஎன்னும் சக்தியானவள், கராளம் ஆம் - பயங்கரத்தையுண்டுபண்ணுவதாகிய, வதனம் - முகம், அசி - வாள். பாசம் - பாசம் என்னும் ஆயுதம், கட்டங்கம் - தண்டு, விழுக்கு - நிணம் (பொருந்திய) முண்டமாலை - மனிதர்சிரமாலை "நரமாலா விபூஷணு" என்பது வடநூல், அங்கம - உடம்பை.

வி - ரை:- காளி மாமிசமில்லாதசரீரமுடையவளாயிருந்தாளாதலின் அங்கமூடுமாமிசமுமின்றி என்றார். சுஷ்க மாம்ஸா என்பது வடநூல். கட்டங்கம் - கபாலத்தோடு வைத்த குண்டுத்தடி என்பர். இது முதல் இரண்டு கவிகள் தேவியின் நெற்றியிலிருந்து தோன்றிய காளியின் வருணனை கூறுவனவாம். 3.

வெருளிசேர் புலித்தோ லாடை யுடையளாய் விபுல
முற்ற, துகளறு வதனி யாகிச் சஞ்சல சிகுவை சொன்
மாச், சகளவிந் துவிற்சேர் சோணக் கயநிக ரக்கந் தந்தி,
யுகளநான் குற்ற திக்கைச் செவிடுற வுஞற்று மார்ப்பும்.

கு - ரை: விபுலம் உற்ற - விசாலமாகத் திறக்கப்பெற்றுள்ள. வதனி - வாயை யுடையவள்: வடமொழியில் வதனமென்பது வாயையுணர்த்தும். சஞ்சலம் சிகுவை - அசைகின்ற (பயங்கரமான) நாவினையுடையவள். சொல் மா - சிறப்பாகச் சொல்லப்படுகின்ற பெரிய. சகளம் - மாயையின் உருவினதாகிய. விந்துவில்சேர் சோணம் - இரத்தபிந்துவினிடத்திற் பொருந்திய செந்நிறத்தினையும், கயம் நிகர் அக்கம் - தடாகம் போன்ற ஆழத்தையுடைய கண்கள். யுகளம் நான்கு - எட்டு ஆகிய. தந்தி உற்ற - யானைகள் பொருந்திய. திக்கை - திசையிலுள்ள உயிர்களை. உஞற்றும் - செய்கின்ற. ஆர்ப்பு - ஆரவாரம்.

வி - ரை: ஸ்ரீ சக்கரத்திலுள்ள திரிகோணத்தில் சுக்கிலம் சோணிதம் (இரத்தம்) மிசிரம் என்னும் மூன்று பிந்துக்கள் உள்ளன. இவற்றுள் மாயா ரூபமாயிருப்பது இரத்த பிந்து வாதலின் சகளவிந்து என்பதற்கு மாயை வடிவமாகிய இரத்த பிந்துவெனப் பொருளுரைக்கப்பட்டது. சகளம் - மாயாரூபம், இரத்தபிந்து மிகவும் செந்நிறமுடையது.

காளியின் கண்கள் மிகவும் செந்நிறமும் ஆழமும் உடையன வாதலின் சோணக் கயநிகர் அக்கம் என்றுரைக்கப்பெற்றுள்ளது. வடநூலிலும் "நிமக்னாரக்த நயனா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளே சென்றதாயும் முழுவதும் சிவந்ததாயுமுள்ள கண்களையுடையவள் என்பது அத்தொடரின் பொருள். கயநிகர் அக்கம் என்பதில் ஆழம் என்னும் பொதுத்தன்மை தொக்கு வந்தது. இது தொகையுவமையாம். சகளவிந்து கண்களின் செந்நிறத்திற்கும் கயம் கண்களின் ஆழத்திற்கும் உவமையாம். பீமன் என்பது வீமன் என வழங்குதல் போலப் பிந்துவென்பது விந்து எனத் தமிழில் வழங்கும். 4

கொண்டன ளாகித் தோன்றிக் குலவிய சேனை நாப்ப, ணண்டர்க ளஞ்சப் புக்கே யசுரர்தம் படையிற் கண்டை, யண்டிய கும்பி தன்னை யங்குச பாச மேந்துங், கண்டக ரோடும் வாரிக் கடிதினில் விழுங்கி னாளால்.

கு - ரை: சேனை நாப்பண் - அசுரசேனைகளின் நடுவில். கண்டை அண்டியகும்பி - மணிகள் பொருந்தியுள்ள யானைகள் அங்குசம் - தோட்டி, பாசம் - கயிறு, ஏந்தும் கண்டகர் - ஏந்திப் பிடித்துக்கொண்டிருக்கின்ற (யானை வீரர்களாகிய) அசுரர்கள். 5.

கொய்யுளைக் குந்தத் தோடு கோலுறு பாகர் கும்மை, வையத்தை வலவ ரோடும் வாரியே விழுங்கிப் பின்னர், எய்யுற்ற சிலர்த முண்ட மிருங்கச மிழுத்துஞ் சிலரோர், மைபெற்ற கந்த ரத்தை வளைத்துமே மடித்தாண் மன்னோ.

உ - ம்: அழாஅஅன், புழாஅஅன் எனவரும். மற்று இஃது 'ஆனென் இறுதி இயற்கையாகும்' என்றவழியே அடங்காதோ எனின் அளபெடுத்த ஆனென் இறுதியாகலின் வேறு கூறிற்றுப்போலும். (கஅ)

முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே. 139

என் - எனின், இதுவும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ - ள்: னகார ஈற்று முறைப்பெயராகிய சொல், ஏகாரம் பெற்று விளியேற்கும் என்றவாறு.

உ - ம்: மகன் - மகனே, மருமகன் - மருமகனே எனவரும். மற்று இது விரவுப்பெயரன்றோ எனின், மேல் ஐகார வீற்றுள் கூறியவாறே கூறுக. (கக)

தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இலவே. 140

என் - எனின், னகார வீற்றுள் விளி ஏற்பன எல்லாம் உணர்த்தி விளிஏலாதன கூறுகின்றது நுதலிற்று.

இ - ள்: தான் என்னும் ஆனீற்றுப் பெயரும் சுட்டெழுத்தை முதலாகவுடைய அன்னீற்றுப் பெயர்களும் ....அவ்வனைத்துப்பெயர்களும் மேற்கூறிய வாற்றானும் பிறவாற்றானும் விளிகோடல் இல என்றவாறு.

தான், யான் என்பன ஆனீறே எனினும் விளியேலா எனக்கொள்க. அவன், இவன், உவன என்னும் சுட்டுப்பெயரும் யாவன் என்னும் வினாப்பெயரும அன்னீறே எனினும் விளிஏலா என்றவாறு.

மற்றுத் தான் என்பதன்றோ எனின், விரவுப் பெயர்களை உயர்திணைப்பெயர்களோடு மாட்டெறியும் வழி விலக்கற்பாடு மாட்டெறிதற்கொப்பன இன்மையின் ஈண்டே கூறினார் என்பது. (உ0)

ஆரும் அருவும் ஈரொடு சிவணும். 141

என் - எனின், நிறுத்த முறையானே ரகாரவீறு விளியேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: ஆர் என்னும் ஈறும், அர் என்னும் ஈறும், ஈர் என்னும் வாய்பாட்டோடு பொருந்தி விளியேற்கும் என்றவாறு.

உ - ம்: பார்ப்பார் - பார்ப்பீர், கூத்தர் - கூத்தீர் எனவரும். (உக)

தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே. 142

என் - எனின், இஃது, எய்தியதன்மேல் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: மேற்கூறிய இரண்டு ஈறும் தொழிற் பெயர்க்கு ஈறாய்வரின் மேற்கூறிய ஈரோடு ஏகாரம பெற்று வருதலும் குற்றமின்று என்று சொல்லுவர் விளங்கிய அறிவினையுடையார் என்றவாறு.

உ - ம்: உண்டார் - உண்டீரே, தின்றார் - தின்றீரே எனவரும். அர் ஈறு வந்தவழிக் கண்டு கொள்க. வழுக்கின்று என்றதனால், தொழிற்பெயரல்லனவும் ஈரொடு ஏகாரம் பெறுதல் கொள்க.

உ - ம்: நம்பீரே, கணியீரே எனவரும். (உஉ)

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. 143

என் - எனின், இதுவும எய்தியதன்மேல் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: அவ்விரண்டு ஈற்றுப் பண்புகொள் பெயரும அத்தொழிற்பெயரோடு ஒரு தன்மைத்து என்றவாறு.

உ - ம். கரியீரே, செய்யீரே எனவரும. ஈண்டும் ஆர்ஈறு வந்தவழிக் கண்டுகொள்க. (உங)

அளபெடைப் பெயரே அளபெடை இயல 144

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: ரகார ஈற்று அளபெடைப்பெயர் னகார ஈற்று அளபெடைப் பெயர்போல இயல்பாய் விளியேற்கும என்றவாறு. (உச)

உ - ம்: மகாஅஅர், சிறாஅஅர் எனவரும்.

சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன. 145

என் - எனின், ரகார ஈற்றுப் பெயர்களுள் விளி ஏலாதன கூறுகின்றது.

இ - ள்: ரகார ஈற்றுச் சுட்டெழுத்தினை முதலாக வுடைய பெயர்கள் ளகார ஈற்றுச் சுட்டுமுதற்பெயர் போல விளியேலாதாயிற்று என்றவாறு. (உரு)

நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை இரண்டும் அவற்றியல் பியலும். 146

என் - எனின், இதுவும் விளியேலாதன கூறுதல் நுதலிற்று.

இ - ள்: நும என்னும் சொல்லினது திரிபாகிய நீயிர் என்னும் சொல்லும், வினைப்பொருளை உணர நின்ற சொல்லாகிய யாவர் என்னும் சொல்லும் என்று சொல்லப்பட்ட அம் முறைமையினையுடைய சொல் இரண்டும் மேல் விளியேலாது என்று சொல்லப்பட்ட சுட்டுப்பெயர் போலத் தாமும் விளியேலா என்றவாறு.

நீயிர் என்பது இர் ஈறாகலின், ஈண்டு எய்திய தின்மையின் விலக்கல் வேண்டா எனின், 'ஏனைப்புள்ளி' என்பதனுள் இர் ஈறுங் கொள்ளப்பட்டமையின் வேண்டும் என்பது. (உசா)

எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும். 147

என் - எனின், நிறுத்த முறையானே லகார ஈறும் ளகார ஈறும் விளியேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: லகார ளகாரம் என எஞ்சிய இரண்டெழுத்தினையும் இறுதியாகவுடைய பெயர்கள் ஈற்றினின்ற எழுத்திற்கு அயலெழுத்து நீண்டு விளியேற்றல் வேண்டும் என்றவாறு.

உ - ம்: குரிசில் - குரிசீல், தோன்றல் - தோன்றால், மகள் - மகாள் எனவரும். (உஎ)

அயல்நெடி தாயின் இயற்கை யாகும். 148

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: அவ்விரண்டு ஈற்றுப்பெயரும் ஈற்றய லெழுத்து நீண்ட நிலைமையவாயின் இயல்பாய் விளி யேற்கும என்றவாறு.

உ - ம்: ஆணபால், பெண்பால், ஏமாள், கோமாள் எனவரும. (உஅ)

விளையினும் பண்பினும்
நினையத் தோன்றும ஆளஎன் இறுதி
ஆயா கும்மே விளிவயி ஞன. 149

என் - எனின், அவவிரணடீற்றுள் ளகார ஈற்றிற்கு எய்தியது விலககிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: விளையினும், பண்பினும் ஆராயத் தோனறும ஆள் எனனும இறுதி விளிககுமிடத்து ஆயாய் விளியேற்கும எனறவாறு.

உ - ம்: உண்டாள் - உண்டாய் எனவும், கரியாள் - கரியாய் எனவும வரும. (உகூ)

முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல. 150

என் - எனின், இதுவும எய்தியது விலககிப் பிறிது விதி வகுத்தல நுதலிறறு.

இ - ள்: ளகார ஈற்றுப்பெயர் னகாரஈற்று முறைப் பெயர் போல ஏகாரம் பெற்று விளியேற்கும் என்ற வாறு.

உ - ம்: மகள் - மகளே; மருமகள் - மருமகளே என வரும். மற்று இதுவும விரவுப்பெயரன்றோ எனின மேற்கூறியவாறே கொளக (௩0)

சுட்டுமுதற் பெயரும் விறுவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர். 151

என் - எனின், இஃது ளகார ஈற்றுள் விளியேலா தன உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ளகார விற்றுச் சுட்டெழுத்தினை முதலாக வுடைய அவள், இவள், உவள் எனனும பெயர்களும், வினாப்பொருண்மை யுடைய யாவள் எனனும் பெயரும், னகார ஈற்றுச் சுட்டெழுத்து முதற்பெயரும வினாவின் பெயரும போல விளியேலா என்று சொலலுவர் புலவர் என்றவாறு. (ருக)

அளபெடைப் பெயரே அளபெடை இயல. 152

என் - எனின், லகார ளகார ஈற்றுப் பெயர் இரண்டற்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: லகார ஈறறு அளபெடைப் பெயரும் ளகார ஈற்று அளபெடைப் பெயரும் னகார ஈற்றுப் பெயர்போல இயல்பாய் விளியேற்கும் என்றவாறு.

உ - ம்: மாஅஅல், கோஒஒள் எனவரும்.

அதிகாரத்தான் இவ்விதிகளுள் ளகாரஈற்று விளி யேலாதனவுங் கூறி இது கூறுகின்றமையின அதிகார மாறிற்று என உணர்க. (ருஉ)

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை. 153

என் - எனின், உயர்திணைப் பெயர் விளியேற்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

மேல் உயர்திணைப் பெயர்க்கண் விளியேற்கும் எனப்பட்ட உயிரீறு நான்கினையும் புள்ளியீறு நான் கினையுமே தமக்கு ஈறாகவுடைய உயர்திணைப் பெயரோடு

அஃறிணை விரவி வரும பெயர்கள் அவ்வீறுகளில் எடுததோதின முறைமையையுடைய விளிங்குங்காலத்து என்றவாறு.

உ - ம்: சாத்தி - சாத்தீ; தந்தை - தந்தாய்; பூண்டு - பூண்டே எனவரும்.

ஒகாரவீற்று விரவுப்பெயர் கண்டதிலலை. இவை உயிர் ஈறு. இனிப புள்ளியீறு - சாத்தன் - சாத்தா, கூந்தல்-கூந்தால எனவரும. ரகார, ளகார ஈறாய் வரும விரவுப்பெயர் கணடதிலலை. (௩௩)

புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறாஉங் காலந் தோன்றின்
தெளிநிலை உடைய ஏகாரம் வரலே. 154.

என் - எனின், உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் விளியேற்குமாறு உணர்த்தி, இனி அஃறிணைப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல நுதலிற்று.

இ - ள்: புள்ளி யெழுத்தினையும் உயிரெழுத்தினை யும் ஈறாகவுடைய அஃறிணையிடத்து எல்லாப்பெயர்களும் விளிககு நிலைமை பெறுங்காலமுண்டாயின் அவ்விடத்து ஏகாரம வருதலைத் தெளியப்படுநிலையை யுடையன என்றவாறு.

உ - ம்: நரி - நரியே; புலி - புலியே; அணில் - அணிலே; மரம - மரமே; எனவரும், "வருந்தினை வாழி நெஞ்சம" எனவும் "காட்டுச் சாரோடுங் குறுமுயால்" எனவும பிறவாறும விளியேற்று வநதனவால் எனின், அவ்வாறு வருவன வழககினகத்து இன்மையின் நரிகள் செய்யுள் விகாரமெனக கொள்க.

"விளிநிலை பெறூஉங் காலந்தோன்றின்" என்றது அவை விளியேற்கு நிலைமை சிறுபான்மையென்றது என உணர்க. தெளிநிலையுடைய என்றது அவ்வேகாரம் பற்றி..............க் கூறியதாகக் கொள்க. (நச)

உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான. 155.

என் - எனின், மேற்கூறிய மூவகைப்பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: மேல் விளியேற்றற்குரியன ..ன எடுத்தோதப்பட்ட எல்லாப் பெயர்களும் தத்தம் மாத்திரையின் மிக்கிசைக்கும் விளிக்குங் காலத்து; யாண்டுமோ எனின், அற்றன்று, சேய்மைக்கண் இசைக்கும் வழக்கிடத்து என்றவாறு.

உ - ம்: நம்பீஇ, சாத்தாஅ எனவரும். வரையறை இன்மையின் வேண்டியவாறு அளபெழும் எனக் கொள்க. ஆயின, உயிர் பன்னிரண்டு மாத்திரையும், ஒற்றுப் பதினொரு மாத்திரையும் எனக் கொள்க. (நரு)

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே. 156

என் - எனின், இதுவும் விளித்திறத்தொடு படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அம்ம என்று சொல்லப்படுகின்ற அகர வீற்று அசைச்சொல் ஆகாரமாகி நீண்டு நிற்றல் அவ்விளியேற்கு முறைமையையுடைய பெயர்களோடு பொருந்தாதாயினும் பெயர் விளிகளோடு இதனையும் ஓர் விளிநிலைமைத்தாகக் கொள்வர் தெளிந்த அறிவினையுடையார் என்றவாறு.

இவ்வாறாயின் முதற்கட்கூறிய வாமமதத்திற்குப் பேதம் என்னையோ எனின அது எல்லாம சத்தி பரிணமம் என்னும பரிணமவாதமாகலிற் பேதமுண்டு என்க. அது வருமாறு. அந்தச் சருவசித்தாந்த விவேகத்தில்,

आदितो वामपक्षे तु तत्सिद्धान्तो निरूप्यते ।
शाक्तं सामान्यतः प्रोक्तमङ्गीकृत्य यथोचितम् ॥
शक्तिरेव जगत्कर्त्री सा पुनः स्यात्सहस्रशः ।
समारभ्य पराशक्तेः क्रियाशक्त्यन्तभेदतः ॥
तद्रूपपरिणामेन जगत्सर्वं चराचरम् ।
मन्त्रेश्वराद्यः सर्वे ततोऽन्ये जीवकोटयः ॥
वर्णादिशब्दभेदश्च तत्त्वाद्यर्थभिदा पुनः ।
ज्ञेयभेदाश्च ज्ञानं च ज्ञापकश्च ततोऽन्यथा ॥
यदस्ति सर्वं तच्छक्ति मूर्तिरूपं तथा जगत् ।

என்றும்,

स्थूलासु मूर्तिषु महीप्रमुखासु मूर्तः
कस्याश्च नाम तव वैभवमस्व यस्याः ।
पत्या गिरामपि न शक्यत एव वक्तुं
साऽसि स्तुता किल मयेति तितिक्षितव्यम् ॥

என்றும்,

शिवरूपं च सा शक्तिर्बहुनोक्तेन किं पुनः ।
एवं विज्ञानवान् मूलनवसिद्धान्त (यामलागम) वर्त्मगः ॥
वैष्णवादिषु बाह्येषु शैवभेदेषु वा पुनः ।
भैरवादिषु भेदेषु कृतकृत्यः पुरा नरः ॥
कर्मसाम्यादिसंसिद्धशक्तिपातविशेषतः ।
वामतन्त्रोक्तमार्गेण सद्गुरोर्लब्धदीक्षया ॥

चर्यादीनामनुष्ठानात् साधको मुक्तिभाग्भवेत् ।
इत्येवं वामसिद्धान्तः कथितः सङ्ग्रहादिह ॥

என்பது. (15)

16. * * *

"இன்னணம்" என்பது வாமத்தின் புறச்சமய அகச்சமய பேதமதமும் மறுப்பும் கூறுமாறு பொதுப் படக் கூறியது. புறச்சமயமாவன முற் கூறியவாறே நியாயாதிகளெட்டும் அகச்சமயமாவன சைவாதிகள் எட்டும். அன்றி,

लोकायतोऽथ बौद्धश्चार्हतो मीमांस एव च ।
मायावादः पाञ्चरात्रं षडेते समया बहिः ॥
शैवं पाशुपतं वामं भैरवं तु महाव्रतम् ।
कालामुखमिति ख्यातमन्तःसमय षट्ककम् ॥

எனவரும் ஆறு எனினுமாம். அது,

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
வென்றன காணு மிருமுச் சமயமும்
நன்றிது தீதிது வென்றுரை நீதர்கள்
குன்று குலைத்தெழு நாயையொத் தாரே"

என்னும் திருமந்திரமாலையானும் உணர்க. இஃதிரட்டுற மொழிதல் பற்றி நின்றது. இனிப் பூருவபக்ஷங்களைப் புறமாக நிராகரிப்பதன்றித் தத்தந் தந்திரபேதமான அத்துவிதாதி வாதபேதங்களையும் வைத்து நிராகரிக்கிற தெல்லாமதத்திற்கும் ஒக்குமேனும், ஈண்டு அகச்சமய மான காளாமுக பாசுபத மகாவிரத வைரவாதிகட்கும் உண்டென்பது தோன்ற அகச்சமயந் தெல்லாமுண் டாம் என்று வித்தது. அகச்சமயங்கள் பெரும்பான் மையும் உலகத்து வழங்காமையின் இப் பேதங்கள் அவற்றிற்குண்டோ இன்றோ என்னும் ஐயமறுத்தற்கும்

அதனையே பின்னும் வற்புறுத்தற்கும் வாமஞ் சுத்த சைவமென்றிரண்டிற் கண்டிடலால் என்றது. ஈண்டுச் சுத்த சைவம் என்றது அகசசமயததுளெடுத்த தக்ஷிண மதத்தை. அது மேலவிளங்கும். இதனுனே யன்றே சித்தாநதத்தினும புறச்சமயம் ஆறும அகச்சமயம ஆறும அன்றி,

शैवभेदं प्रवक्ष्यामि ऐक्यपाषाणवादिनौ ।
भेदवादी समवादी सङ्क्रान्ती चाविकारवान् ॥
परिणामी च शैवश्च सिद्धान्ती पर ईरितः ।

எனவும் பிறவும வந்ததூஉம். இவ்வாறு பிறவும் வைத்து மறுப்பிற் பெருகுமாதலால இந்த நியாயங்கொணடு மற்றும ஊகத்தான் நிராகரிககககடவதெனக கூறு வான், இங்கு மறுத்துபோன மறையு மேனே அகச் சமயத்து மியமபலாம் எனறது. (16)

17. * * *

'இத்திறத்திற் சித்தி' என்பது இவ்வாறு புருஷார்த்த தாயகமான வாமத்தைப் பூருவ பக்ஷமென்றும அகத திற்குப் (?) புறம எனறுஞ் சொலலியதற் கேதுக கூறியது. ஈணடுச் சததிததுவப் பிராப்தி சத்தாபி வியததியெனறது.

शक्तितत्त्वे तदद्वैताः शिवतत्त्वे परे स्थिताः ।

என்னும் சித்தாந்த இரகசியத்தாற் காண்க.

அவ்வாறு வந்தது மேலுள்ள சிவத்தை யறியாமை யின். இம்மத மகப்புறமானது,

वामं च दक्षिणं चैव तद् द्वयोर्मिश्रकं तथा ।
शैवा बाह्याः समाख्याताः शैवा अपि न पूजिताः ॥

என முற்காட்டிய சுப்பிரபேத வசனத்தாலுணர்க. (17)

18. * * *

"மறையவர்தாம் வேள்வியில்" என்பது வேதத்திற் சொன்னவாறே மாமஸபக்ஷணம் போல வாமநூலிற் சொன்னவாறே மதுமாமிச நுகர்தல் குற்றமன்று என்பதை மறுத்தது. இருவரும் பூருவ பக்ஷிகளென்பதொத்தலின், பிறவெளி. (18)

19. * * *

"கருது வாமிகள் சூலம்" என்பது வாமசமயிகள் வேடநிலை கூறியது. அது,

शङ्खास्थिभूषणैर्युक्तं मद्यमांसं तु सेवितम् ।
शूलं कपालं खट्वाङ्गमित्येतच्छाक्तलक्षणम् ॥

எனக் கூறப்பட்டது. பிறவும் இம்மத மறுப்பின் வேண்டுவன விரித்துரைத்துக் கொள்க. (19)

இங்ஙனம் கூறியவற்றுள் ஐந்து பாடல் அகச் சமயப் பாரிப்பும், மறுப்பும போகப் பதினொன்கு பாடல் வாமமதமும மறுப்பும்.

இனிவைரவமதம்

1. * * *

"தக்க வகையான்" என்பது வைரவ மதவாதிகள் பெறும் புருடார்த்தம் கூறுமுகத்தால் அவர் வேடநிலையும் கூறுகின்றது. அந்த வைரவ சைவர் வேட இலக்ஷணம,

शङ्खं च कुण्डलं चैव कृष्णकञ्चुकसंयुतम् ।
शूलं डमरुकं चैवमिति भैरवलक्षणम् ॥

என அறியத்தக்கது. (1)

2. * * *

"மன்னு வைரவம்" என்பது மற்ற புறமதம் யாவையும பூருவ பக்ஷம், வைரவ மதமே சித்தாந்தம் என்கிறது. ஈண்டுப் 'பைரவந்தானுயர் முகத்திஞெகுமாறு'

शैवं पूर्वमुखोत्पन्नं दक्षे कालामुखं तथा ।
पश्चिमे पाशुपतकमुत्तरे तु महाव्रतम् ॥
ऊर्ध्ववक्त्रे भैरवं च पाताले वाममुच्यते ।

என முற்கூறிய தக்ஷிணைகம வசனத்தால் உணர்க. பிற வெளி. (2)

3. * * *

"ஒருமை........" எனபது வைரவ தந்திரங்களிவை என்பதும, அவற்றின் பிரமேயம இவ்வாறெனபதும் கூறுகின்றது. ஈண்டுககூறிய வைரவ தநதிரங்களாமாறு

भैरवस्याष्टभेदाश्च चतुः षष्ट्युपभेदकाः ।
वामं षोडशभेदश्च तत्तद्भेदमनेकधा ॥

என்னும் ஞானசித்தி வசனத்தால் உணர்க. ஈண்டு வைரவம் என்றது சுத்த சைவ தக்ஷிணமென்றும, மற்றது வாமம் என்னும் வைரவ பேதம் என்றும் கூறுவாரும் உளர். இனிக கதிரவன்றன கிரணம் போல் அவன் குணங்கள் சத்தி என்றது சாதத மத மறுப்புத் தோனற. மற்றனைத்தும மேல விளங்கும. (3)

4. * * *

"ஐந்தொழிலு மியற்றுமல் இயற்றும்" என்பது பதி இலககணம கூறுமுகததால ஜகத சிருஷ்டிககிரமம் கூறுகின்றது. அது வருமாறு- சுவசசந்தததில,

देवदेवो जगन्नाथः परमात्मा शिवोऽव्ययः ।
पूर्वानुक्रमयोगेन अकामात्सृजते जगत् ॥
आदित्यस्य मणिर्यद्वत्तापितो रविरश्मिभिः ।
वह्निः संजायते तत्र न रवेस्तत्र कामना ॥
मणेरपि न कामित्वं तद्वद् देवस्य चेष्टितम् ।
आदित्यवच्छिवो ज्ञेयः शक्ती रश्मिरिव स्थिता ॥
ऋतुकालमनुप्राप्य कालोऽङ्कुरनियोजकः ।
शिवः शक्तिसमावेशात्तद्वच्च जगदुद्भवः ॥

எனவும், அதிலேயே சிருஷ்டி படலத்தில்.

योऽसौ देवः परः सूक्ष्मः कारणः सर्वगः शिवः ।
निमित्तकारणं सोऽत्र कथितस्तव सुव्रते ॥
अकामात्सृजते सर्वं जगत्स्थावरजङ्गमम् ।
ज्ञानशक्त्या पुनश्चैव समालोक्य वरानने ॥
इच्छाशक्त्या समाविष्टः क्रियाशक्त्या च सुव्रते ।
मायातत्त्वं जगद्बीजं नित्यं चाप्रभु चाव्ययम् ॥
तत्स्थं तत्त्वात्मवर्गं तु युगपत्क्षोभयेत् प्रभुः ।
हेलादण्डहतं देवि बदर्यास्तु फलं यथा ॥
तिर्यगूर्ध्वमधश्चापि निर्गच्छन्तं समन्ततः ।
मुक्तेस्तु भाजनं ये तु अनुध्यानाच्छिवेन तु ॥
ऊर्ध्वं गच्छन्ति ते सर्वे शिवं परमनिर्मलम् ।
विद्याया भाजनं तिर्यङ्मन्त्ररूपा भवन्ति वै ॥
संसारभाजनं ये तु मलकर्मकलान्विताः ।
ते वै व्रजन्त्यधस्तात्तु घोरे वै चातिदारुणे ॥

எனவும் அறியத்தக்கது. (4)

5. * * *

"மேலதெனப் போனது" என்றது மாயை மூவகைப்படும் என்று கூறுமுகத்தாற் சுத்த மாயையிற் சில

தத்துவத்தோற்றம் கூறியது. அதனை மாயாபேதத்திற்கு உதாகரித்தவற்றுட் காண்க. மற்றவற்றிற்குத் தோற்றம் வருமாறு. சுவச்சந்தத்தில.

अकामात्सृजते सर्वं जगत्स्थावरजङ्गमम् ।
स्वतेजसा वरारोहे होमां (व्योमां) संक्षोभ्यलीलया ॥
उपादानं तु तत्प्रोक्तमक्षुब्धं समवायतः ।
ततः शून्यं समुत्पन्नं शून्यात्स्पर्शसमुद्भवम् ॥
तस्मान्नादः समुत्पन्नः पूर्वं वै कथितस्तव ।

என வரும். (5)

(6) * * *

"நாதநவ விதமாகும" என்பது முற்கூறிய நாத பேதமும அதிறறேன்றிய விந்து பேதமும் கூறு கின்றது. அது வருமாறு: சுவச்சந்தத்திலேயே,

अष्टधा तु स देवेशि व्यक्तः शब्दप्रभेदतः ।
घोषो रवः स्वनः शब्दः स्फोटाख्यो ध्वनिरेव च ॥
झङ्कारो हुङ्कृतिश्चैव अष्टौ शब्दाः प्रकीर्तिताः ।
नवमस्तु महाशब्दः सर्वेषां व्यापकः स्मृतः ॥
नदते सर्वदायोऽसौ सर्वभूतेष्ववस्थितः ।
तस्मात्सदाशिवो देवो व्यक्तो वै दृक्क्रियात्मकः ॥
नादाद्बिन्दुः समुत्पन्नः सूर्यकोटिसमप्रभः ।
स च वै दशधा योगो दशतत्वफलप्रदः ॥
दशधा वर्णरूपेण दशदैवतसंयुतः ।
सितं रक्तं च पीतं च कृष्णं हरितपिङ्गलम् ॥
नीलं विचित्रवर्णं तु स्फटिकाभं मनोरमम् ।
दृश्य सर्वाणि रूपाणि त्यजेत्तानि विचक्षणः ॥

என வரும். (6)

7. * * *

“முன்னுவிந்து வாக்கனைத்து மியற்றும்” என்பது வாக்குற்பத்தியும் மற்றச் சுத்த தத்துவத் தோற்றமும் கூறுகின்றது.

'.........முன்னுவிந்து இயற்றும்' என்றதனுனே முன்னர்,

दृश्य सर्वाणि रूपाणि त्यजेत्तानि विचक्षणः ।
एक एव तु गृह्णीयाच्छेषाऽन्ये गुणरूपकाः ॥

என்று கூறும் விந்து அபரவிந்துவாம்; ஆகவே அதற்குக் காரணம் அபரநாதமாம். அதுவே முற்கூறிய பரிசஞ், சத்திதத்துவம் எனவும் அதற்குக் காரணமான சூனியம் சிவதத்துவம் எனவும் கூறியவாறாயிற்று. இனி,

अष्टधा तु स देवेशि व्यक्तः शब्दप्रभेदतः ।

என்றது பரநாத இலக்ஷணம் எனவும்,

दशधा वर्णरूपेण दश दैवत संयुतः ॥

என்றது பரவிந்து இலக்ஷணம் எனவும் வருமாலோ எனின், இவ்வாறு தெரிசனமாகின்றது அபரநாத அபர விந்து வல்லாமற் பரநாத பரவிந்துவாகா என்க. என்னை? பரநாதம் சப்த தத்துவமன்றிப் பரமகாரண மாயிருக்கும். அபரநாதம சப்த தத்துவமாய் சிரவணுங்குஷ்டாதிபிரயோகங்களால் இந்த தேகத்திலே ஸ்வரூபமாய் தெரிசனமாகலின் சப்தப்பிரமம் என்று சொல்லப் படும். அது நிச்சுவாசகாரிகையில,

घोषो रवः स्वनः शब्दः स्फोटाख्यो ध्वनिरेव च ।
झङ्कारो हुङ्कृतिश्चैव शब्दमेवाष्टकं परम् ॥

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

6-வது ஆண்டு குருபூஜை விழா நிகழ்ச்சி.

13—6—51 புதன்கிழமை குருபூஜைவிழா கொண்டாடப்பெற்றது. காலை மாலை இரு வேளைகளிலும் அபிஷேக ஆராதனைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. காலை 10 மணி முதல 12 மணிவரையிலும் நடுப்பகல் மாகேஸ்வரபூஜைக்குப் பிறகு மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் கொறடாச்சேரி ஸ்ரீமத் வாலையாநந்த சுவாமிகள் அவாகளின் சீரிய தலைமையில் மூப்பொருள் மாநாடு நடந்தது. பிறகு 9 மணி வரை மதுரை திரு. எஸ். சோமசுநதரம & பார்ட்டியாரின் இசை விருந்தும நடைபெற்றது. பின் 9-30 மணிககு ஸ்ரீலஸ்ரீ மகாசநநிதானம அவர்கள் குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளி, தரிசனமமுடித்து அனைவர்ககும் திருநீறறுப் பிரசாதம அளிதது, குருபூஜைவிழாமலராக அச்சிட்ட சச்சபுடவெணபா எனனும் தாளசாஸ்திர நூலையும வழங்கினாகள்.

அனறும முதல் நாள் மாலையிலும் தருமபுர ஆதீனததேவாரபாடசாலை ஆசிரியர் மாணவர்களால் தேவாரபாராயணமும், ஆதீன நாதசுரவித்துவானின நாதசுரககசசேரியும நிகழ்நதன.

நிகழ்ந்த சொற்பொழிவுகள்:-

திருககடவூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மாணிககவாசகத தமபிரான மெய்கண்டார், சீகாழி கட்டளை விசாரணை ஸ்ரீமத சோமசுநதரத் தமபிரான அருணந்தி சிவம், மாயூரம குமரககட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத சுவாமிநாதத தமபிரான உமாபதிசிவம, தருமபுர ஆதீனக கல்லூரிப் பேராசிரியர்கள விததுவான் திரு. M. ஆறுமுக தேசிகர் உய்யவந்தார், விததுவான் திரு. V. S. குருசாமி உண்மைவிளக்கம், திருவாரூர் இராஜாஙகக கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தமபிரான சுவாமிகள் முபபொருள் உண்மை, தருமபுர ஆதீனப் பலகலைககல்லூரித் துணைததலைவர் விததுவான திரு. ச. தண்டபாணி தேசிகர் விழாமலர் வெளியீட்டுரை.

Regd. No. M. 4454.



இலவச மருத்துவ நிலையத்தின் முன்பார்வை — அலங்காரப் பந்தலுடன்

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—7—1951.